VISIT…

பெண்ணினின்
பெருமை
வைகோ

பெண்ணின்
பெருமை

– வைகோ –

வெளியீடு

மாநில மகளிர் அணி,

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

தாயகம்,

12, ருக்மணி இலட்சுமிபதி சாலை,

எழும்பூர்,

சென்னை – 600 008

தொலைபேசி 2851 6565/66

நூலின் தலைப்பு : **பெண்ணின் பெருமை**

முதல் பதிப்பு : 12 மார்ச் 2008

ஆசிரியர், : ப. அருணகிரிநாதன்
கணினி வடிவமைப்பு

நூலின் அளவு : டெம்மி சைஸ் 8½ x 5½

தாள் : 80 G.S.M. மேப் லித்தோ

முகப்பு அட்டை வடிவமைப்பு : **விஜயன்**
☎ 98402 75550

அச்சிட்டோர் : **சிவசக்தி அச்சகம், சிவகாசி**
☎ 04562-27 4005; 27 5005
Cell: 94433-79005

நன்கொடை : ரூ 10/-

வணங்குகிறேன்!

பதினொரு ஆண்டுக் காலமாக எனக்குத் தோள் கொடுத்து வருகின்ற என்னுடைய தோழர்கள், என்னுடைய அன்புச் சகோதரிகள், இந்தப் போராட்டக் காலத்தில், வைகோவுக்கு உறுதுணையாக இருங்கள் என்று சொன்ன தாய்மார்கள், வாழ்க்கையில் துயரங்களைச் சரிசமமாகப் பங்கெடுத்துக் கொள்கிற மாதர் குலத்தின் மணிவிளக்குகள், அவர்களின் வாழ்க்கைத் துணைவியர், அவர்கள் இருக்கிற இடத்துக்கு நான் இந்த இடத்தில் இருந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தாய் மாரியம்மாளின் காலைத் தொட்டு வணங்குவதைப் போலவே அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களின் காலைத் தொட்டு வணங்குகிறேன்.

– வைகோ

நன்றி

மக்கள் தலைவர் - மறுமலர்ச்சி நாயகன் வைகோ அவர்களின் தலைமையில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், தமிழக அரசியலில் தடைகளைத் தகர்த்து, தடந்தோள் தட்டி வீறுநடை போட்டு வருகிறது. அந்த அணிவகுப்பில், மகளிரின் பங்கு மகத்தானது. மாநிலம் முழுவதும் மகளிர் அணியின் பணிகள் சீரும், சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. கழகம் நடத்துகின்ற போராட்டங்கள் அனைத்திலும், பெருமளவில் திரண்டு வந்து பங்கேற்று, பெருமை சேர்க்கின்றார்கள் மகளிர் அணித் தங்கங்கள்.

மகளிர் அணிப் பணிகளை ஒருங்கிணைப்பதில், எனக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைப்புத் தருகின்ற மாநில மகளிர் அணித் துணைச் செயலாளர்கள், மாவட்ட மகளிர் அணிஅமைப்பாளர்கள் மற்றும் மகளிர் அணிப் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலினை உருவாக்கிய அன்புச் சகோதரர் அருணகிரி அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்த தோழர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்,

குமரி,
செயலாளர், மாநில மகளிர் அணி,
மறுமலர்ச்சி தி.மு.க.
(98840–40950)

பெண்ணின் பெருமை!

மார்ச் 8. உலக மகளிர் நாள்!

மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் மாநில மகளிர் அணியினர், ஆண்டுதோறும் இந்த நாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். மகளிரின் உரிமைக்குரலை ஓங்கி ஒலிக்கின்றனர். 2005 ஆம் ஆண்டு, மார்ச் 8 ஆம் நாள், சென்னை காமராசர் அரங்கில் நடைபெற்ற மறுமலர்ச்சி மகளிர் மாநாட்டில், தமிழகம் முழுவதும் இருந்து திரண்டு வந்த பல்லாயிரக்கணக்கான மகளிர் பங்கு ஏற்றுச் சிறப்பித்தனர். கழக மகளிர் அணியின் வலிமையைப் பறைசாற்றுவதாக அமைந்தது அந்நிகழ்வு.

அந்த மாநாட்டில், பெண் இனத்தின் பெருமைகளை, சாதித்த மகளிர் பற்றிய குறிப்புகளை எடுத்து உரைத்து தலைவர் வைகோ அவர்கள் ஆற்றிய உரையும், மாநாட்டில் வடிக்கப்பட்ட பெண் உரிமைத் தீர்மானங்களும், இந்த நூலில் பதிவு ஆகி இருக்கின்றன. 'ஆட்சி அதிகாரத்தில் பெண்கள்' என்ற தலைப்பில், இருபதாம்நூற்றாண்டில் உலக நாடுகளில் தலைமைப் பொறுப்பு வகித்துச் சாதனை புரிந்த மகளிர் குல மாணிக்கங்களைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய கட்டுரையும் இடம் பெற்று உள்ளது.

மாநில மகளிர் அணிச் செயலாளர் குமரி அவர்களின் முயற்சியால் உருவாகி இருக்கின்ற இந்த நூல், 2008 மார்ச் 12 ஆம் நாள், சென்னை - அண்ணா சாலை ராணி சீதை அரங்கில் நடைபெறுகின்ற மகளிர் அணி ஆண்டு விழாவில் வெளியிடப்படுகிறது. மறுமலர்ச்சி தி.மு.கழகத்தின் கருத்துகள் அடங்கிய நூல்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. மேலும் பல நூல்கள் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. வைகோ மற்றும் கழக முன்னணியினரின் உரைகள் அடங்கிய ஒளிப்படக் குறுவட்டுகள் தாயகத்தில் கிடைக்கும். உங்கள் பகுதியில் ஒளிபரப்பிடுங்கள்.

என் எண்ணங்களை வண்ணங்கள் ஆக்கி, கண்ணைக் கவரும் முகப்பு அட்டையை வடிவமைத்த விஜயன், கணினி வடிவமைப்பில் உதவிய பாடாலிங்கம், மதுரை அமுதன், சிறப்பான முறையில் அச்சிட்டுக் கொடுத்த குமரேசன் - சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி, அலுவலகப் பணிகளில் உதவிய

ருத்ரன், மோகன்தாஸ், யுவராஜ் முகப்படக் கலைஞர் இராஜா ஆகியோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணையதளத்தில் சங்கொலி படியுங்கள். **www.sangoli.org.**
வைகோ படங்களை, **http://vaiko.4shared.com** என்ற இணையதளத்தில் இருந்து உங்கள் கணினியில் பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்.

தமிழை நேராக அச்சிடுங்கள், ***சாய்த்து அச்சிடாதீர்கள்***
தமிழ்ச் சொற்களைத் தனித்தனியாக முழுமையாக எழுதுங்கள்!
ஒருமுறையேனும் உலகத்தைச் சுற்றி வாருங்கள்
உங்கள் வாழ்க்கையை ஒரு நூலாக எழுதுங்கள்

அருணகிரி
(9444 39 39 03)

வைகோ
படம்

பெண்ணின் பெருமை

பதினொரு ஆண்டுக்காலம் நமக்கு ஏற்பட்ட துன்ப, துயரங்களையெல்லாம் தாங்கிக்கொண்டு, நமது இயக்கத் தோழர்களின் ஒவ்வொரு இல்லத்திலும் கண்ணீரைக் கண்களில் அடக்கிக் கொண்டு, நெஞ்சத்தைப் புதைத்துக் கொண்டு, என் சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் பக்கபலமாக, உற்ற துணையாக இருந்து, அவர்கள் மனம் வாடி விடக்கூடாது என்பதற்காகப் பொருள் இழப்பு ஏற்பட்டபோது, எதிர்பாராத துயரங்கள் ஏற்பட்டபோது, கண்ணுக்கு முன்னாலேயே வெற்றிகள் தட்டிப் பறிக்கப்பட்டபோது, பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் ஏளனமும், கேலியும் செய்தபோது, அவர்களையெல்லாம் அரவணைத்து ஆறுதல் சொல்லி, இந்த இயக்கத்திற்கு உறுதுணையாக இருக்கின்ற அருமைத் தாய்மார்களே, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் என் தலை தாழ்ந்த வணக்கம்.

தியாகச் சுடர் பெருந்தலைவர் காமராசர் அரங்கத்திலே 'மறுமலர்ச்சி மகளிர் மாநாடு' விமரிசையாக நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இதை வர்ணிப்பதற்குச் சொற்கள் எதுவும் இல்லை. புராணத்திலே, நொடிப்பொழுதிலே மயன் மாளிகையை உண்டாக்கினான் என்று சொல்வார்கள். நேற்று இறிரவு பத்து மணிக்குத்தான் இங்கே ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்து, இந்த மண்டபம் நமக்கு ஒப்படைக்கப்பட்டது. இரவோடு இரவாக, பல நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள், நெடுஞ் சாலையில், இந்த அரங்க வளாகத்தில் பணியாற்றி, இந்த மாநாட்டை இவ்வளவு அழகுற, ஆக்கத்தோடு நடைபெறுவதற்காக உழைத்தார்கள்.

காவிரிப்பூம்பட்டினத்திலே இருந்து வந்து இருக்கின்ற சகோதரி சிவமணி மேகலையின் பெயரை நான் இங்கே விளித்துப் பேசினேன். அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியைக் கையில் வைத்துக் கொண்டு, பசித்தவர்களுக் கெல்லாம் உணவு வழங்கினாள் மணிமேகலை என்று சாத்தனார் சொன்னாரே,

அதைப்போல இந்த இயக்கத்தில் எத்தனை பொருளாதார நெருக்கடிகள் இருந்தாலும் கூட, இந்தக் குடும்பத்தில் விருந்து ஓம்பும் பண்பு என்றைக்கும் மங்காது, மறையாது என்பதால்தான் வருகை தந்த அனைவருக்கும் அறுசுவை விருந்தைத் தந்தாரே, அதற்குப் பாடுபட்டாரே தியாக வேங்கை ஈரோடு மாவட்டச் செயலாளர் என் ஆருயிர்ச் சகோதரர் அ. கணேசமூர்த்தி அவருக்கும், அவருக்கு உறுதுணையாக இருந்து பாடுபட்டவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது என்னுடைய கடமை ஆகும்.

காமராசர் அரங்கத்திலே மகளிர் மாநாட்டை நடத்திட வேண்டும் என்று நினைத்தபோது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று இருக்கின்ற ஆருயிர்ச் சகோதரர் மதிப்பிற்கு உரிய ஜி.கே. வாசன் அவர்களைத் தொலைபேசியிலேதான் நான் தொடர்பு கொண்டேன். ஏறத்தாழ ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ஆம் தேதி இரவு, அமெரிக்க நாட்டில் இருந்த நான், நினைவிலே நிலைத்து இருக்கின்ற , நான் எந்நாளும் நெஞ்சிலே மதித்துப் போற்றுகின்ற அய்யா மூப்பனார் அவர்களிடம் தொலைபேசியில் பேசினேன். 'என் மகன் திருமணத்திற்கு மண்டபம் வேண்டும்' என்று கேட்டேன். பொருள்காட்சிக்காக அந்த மண்டபத்தைத் தருவதாக இருந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டு, ''திருமண நிகழ்ச்சியை நீங்கள் நடத்திக் கொள்ளுங்கள், கவலையின்றித் திரும்பி வாருங்கள்'' என்று சொன்னார்.

அந்தத் தந்தையின் உணர்வைப்பெற்ற தனயன், ஒரு கணங்கூடச் சிந்திக்காமல் காமராசர் அரங்கத்தில் உங்கள் விழா நடக்கும் என்று சொன்னதோடு மட்டும் அன்றி, அவர்கள் இயக்கத்தில் ஒரு நிகழ்ச்சி நடந்தால் இந்த மண்டபத்திலே எத்தனை உதவிகள் கிடைக்குமோ, அத்தனையும் நமக்குச் செய்து தந்தார். என் ஆருயிர் மூப்பனார் அவர்களுடைய அருமை மகன் வாசன் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாராட்டுகிறேன்

மார்ச் 8-ஆம் நாள் உலக மகளிர் நாள். இங்கே உரை ஆற்றிய பலரும் அதைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டார்கள். நெடுந்தொலைவில் இருந்து வந்து இருக்கின்ற என் அருமைச் சகோதரிகளும், தங்கைகளும், தாய்மார்களும் இரவு எட்டுமணிக்கெல்லாம் அவர்களது வாகனங்களிலே புறப்பட்டு ஊருக்குத் திரும்ப வேண்டும். நள்ளிரவிலே பயணம் புறப்படக் கூடாது. நடுநிசி கடந்ததற்குப் பிறகு சற்று ஓய்வு எடுத்துச் செல்ல வேண்டும் என்றெல்லாம் முன்னெச்சரிக்கையாக நாங்கள் ஏற்பாடு செய்தோம். நிகழ்ச்சி இரவு எட்டு மணிக்கு முடிந்துவிடும் என்று நாங்கள் தீர்மானித்து இருந்தாலும்,

காலம் கடந்து கொண்டே இருக்கிற சூழலில் அவர்களது பயணத்தைத் தடுக்கக்கூடாது. அவர்கள் பயணம் செல்லட்டும், நான் பத்து நிமிடம் உரையாற்றி என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்ளலாம் என்று நினைத்தேன். ஆனால், நமது பொருளாளர் அவர்களும், முன்னணியினரும் உரையாற்றுங்கள் என்று ஆணையிட்டு இருக்கின்றார்கள். இது வரலாற்றிலே குறிப்பிடத்தக்க ஒரு நாள். பல மாதங்களாகத் திட்டமிட்டுப் பாடுபட்டு நம்முடைய அருமைச் சகோதரிகள் இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி இருக்கின்றார்கள்.

இந்த மாநாட்டுக்கு வந்து சிறப்புரை ஆற்ற வேண்டும் என்று மத்திய அமைச்சர் ரேணுகா சௌத்ரி அவர்களிடம் நான் கேட்டபோது, இந்த நாளில் அவர்கள் வெளிநாட்டுக்குச் செல்வதாகத் திட்டம் இருந்தது. ஆயினும்கூட என்னுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, தமது வெளிநாட்டுப் பயணத்தைத் தவிர்த்துக்கொண்டு இங்கே வந்து, மாநாட்டில் கருத்துச் செறிவுள்ள அரியதோர் உரையாற்றி விட்டுச் சென்று இருக்கிறார் அன்புச் சகோதரி ரேணுகா சௌத்ரி. இந்த நிகழ்ச்சிக்குச் செல்ல வேண்டும் என்று அருமைச் சகோதரர் அகமது படேல் அவர்கள் அன்னை சோனியா காந்தி அவர்களுக்குத் தெரிவித்து, அதன் மூலமாகவே அந்த வாய்ப்பைப் பெற்றுக் கொண்டு வந்து இங்கே உரையாற்றிச் சென்ற ரேணுகா சௌத்ரி அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உரையாற்றிச் சென்ற அருமைச் சகோதரி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்களுக்கும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்பார்த்ததைவிடப் பல வகையில் வெற்றி பெற்ற பூரிப்பில் புளகாங்கிதத்தில் நாங்கள் திளைத்துக் கொண்டு இருக்கிறோம். இங்கே அமர்ந்து இருக்கின்ற தலைமை நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள் என அனைவரும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டு இருக்கிற நேரம் - இந்த நேரம்.

அண்ணன் தம்பி

நாங்கள் தாயை வணங்குகிறவர்கள். தாயின் காலடியைத் தொட்டு வணங்குகிறவர்கள். உதட்டு அளவில் அல்ல, நாங்கள் தாயைத் தெய்வமாக மதித்து நடப்பவர்கள். ''நாம் அனைவரும் ஒரே தாயின் வயிற்றில் பிறக்க முடியாது என்கின்ற காரணத்தினால் தனித்தனித் தாயின் வயிற்றில் பிறந்து அண்ணன், தம்பிகள் ஆனோம்'' என்று சொன்னார் பேரறிஞர் அண்ணா. உலகத்தில் எந்த அரசியல் கட்சியும் தராத கோட்பாட்டைத் தந்தவர். தோழமை என்று சொல்கிற கட்சிகள் உண்டு. நட்பைச் சொல்கிற கட்சிகள்

உண்டு. தலைவன், தொண்டன் என்று உறவைச் சொல்கிற கட்சிகள் உண்டு. ஆனால், **"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்று 2000 ஆண்டுகளுக்கு முன்பே உலகத்துக்கு நம்முடைய முன்னோர்கள் சொன்ன கருத்தை நெஞ்சத்தில் பதித்தவாறு, இந்த இயக்கத்தைத் தொடங்கி நடத்துகிற வேளையில் அண்ணன், தம்பி என்ற பாச உணர்வை உருவாக்கி, கட்சியை நடத்தியவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

நேசத்தை வளர்ப்பதற்கு மட்டும் அல்ல, பாசப் பிணைப்பிற்காக மட்டும் அல்ல, வர்ணாசிரமம், வைதீகம் ஜாதி எல்லைகளைத் தகர்த்து எறிய வேண்டும் என்பதற்காக, மத வேற்றுமைகள், மதமாச்சரியங்கள் மாய்க்கப்பட வேண்டும் என்பதற்காக, எல்லோரும் அண்ணன்-தம்பி என்ற எண்ணத்தை உருவாக்கியவர் பேரறிஞர் அண்ணா. அந்தப் பாதையில் அடி பிசகாமல் செல்கிற கட்சி மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.

தாயைத் தெய்வமாக வணங்குகிறோம் என்று சொன்னேன். என் சகோதரர்கள் அனைவரையும் பெற்றெடுத்தத் தாய்மார்களின் காலடி களையும் தொட்டு வணங்குகிறேன். பதினொரு ஆண்டுக் காலமாக எனக்குத் தோள் கொடுத்து வருகின்ற என்னுடைய தோழர்கள், என்னுடைய அன்புச் சகோதரிகள், இவர்களைப் பெற்றெடுத்தத் தாய்மார்களின் திருவடிகளுக்கு நான் இந்த இடத்தில் இருந்து என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

களத்தில் உறுதி

தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தோம். ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தோம். உலகத்தின் எந்த மூலையில் தமிழனுக்குத் துன்பம் வந்தாலும், எங்களுக்குத் தீங்கு வரும் என்றாலும், எங்கள் கட்சியைத் தடை செய்கிற அளவுக்கு ஆபத்து வரும் என்றாலும் அதைக் கால் தூசியாக நினைத்து களத்தில் உறுதியாக நின்றோம். சிறைவாசம் ஏற்றோம். நாட்டு மக்களின் நன் மதிப்பைப் பெற்றோம். அங்கீகாரத்தைப் பெற்றோம்.

வைகோவுக்கு உறுதுணையாக இருங்கள் என்று சொன்ன தாய்மார்கள், வாழ்க்கையில் துயரங்களைச் சரிசமமாகப் பங்கெடுத்துக் கொள்கிற மாதர் குலத்தின் மணிவிளக்குகள், அவர்களின் வாழ்க்கைத் துணைவியர், அவர்கள் இருக்கிற இடத்துக்கு நான் இந்த இடத்தில் இருந்து என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் தாய் மாரியம்மாளின் காலைத் தொட்டு வணங்குவதைப் போலவே அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களின் காலைத் தொட்டு வணங்குகிறேன்.

இது இரத்த பாசத்தால் கட்டிக் காக்கப்பட்டு இருக்கிற இயக்கம். தியாகத் தணலில் பிறந்த இயக்கம். கொள்கை, இலட்சியங்களுக்காக வாழ்கிற இயக்கம். எங்கள் இயக்கத்தில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் துல்லியமாகத் திட்டமிட்டு ஒரு குறிக்கோளோடு, குறைந்த கால அரசியல் இலாபங்களுக்கு அல்லாமல் அடுத்த தலைமுறைக்காகத் திராவிட இயக்கத்தின் கொள்கைகளைக் காப்பதற்காக, அறிவாசான் பெரியார் சொன்னதை, பேரறிஞர் அண்ணா சொன்னதை நெஞ்சில் நிறுத்திக் கொண்டு இந்த இயக்கத்தை நாங்கள் நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

மார்ச் 8 வரலாறு

மார்ச் 8 ஆம் நாள் உலக மகளிர் நாள். எங்கே இந்தக் கருத்து உருவாயிற்று? உலகம் பல புரட்சிகளைச் சந்தித்து இருக்கிறது. அகிலம் திடுக்கிட வைக்கிற பல நிகழ்ச்சிகளைச் சந்தித்து இருக்கிறது. பிரெஞ்சு நாட்டில் எழுந்த புரட்சி சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற குரல் எழுந்த புரட்சி, மண் குடிசைகள் மாளிகைகளைப் பார்த்து மிரட்டிய புரட்சி. அடிமைகளின் கரங்களில் வீர வாள் ஜொலித்தப் புரட்சி. அங்கே வெட்டுக் கத்திகளுக்கு முன்னால் மன்னர்களின் தலைகள், மகாராணிகளின் தலைகள் வெட்டப்பட்ட நிகழ்ச்சி ஐரோப்பா கண்டத்தையே அச்சுறுத்திய புரட்சி 1759 ஆம் ஆண்டு நடந்தது. அந்தப் புரட்சி நடந்தபோது, லூயி மன்னன் மாளிகையைச் சுற்றி எட்டு ஆயிரம் பெண்கள் கையில் ஆயுதங்களோடு இருந்தார்கள். அந்தப் புரட்சியில் பெண்களும் பங்கு ஏற்றார்கள்.

அதன் விளைவாகவே 79 ஆண்டுகளுக்குப் பிறகு, சம உரிமை எங்களுக்கு வேண்டும், வேலை செய்யும் இடத்தில் உரிமை, தொழிற்சங்கத்தில் உரிமை என்ற குரல் எழுப்பப்பட்டு அதற்கும் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி பெண்களுக்கு வேலை நிறுத்த உரிமைக்கு உத்தரவாதம் வழங்கப்பட்ட காலத்தில்தான், சரியாகப் பிரெஞ்சுப் புரட்சி நடந்து 130 ஆண்டுகளுக்குப் பிறகு, 1889 ஆம் ஆண்டு கிளாரா ஜெட்கின் என்கிற வீராங்கனை அனைத்துலகத் தொழிலாளர் சங்கத்தில் பெண்களுக்கும் சம உரிமை வேண்டும் என்று குரல் கொடுத்தார். அந்தக் குரல் எழுந்தது; இருபதாம் நூற்றாண்டு பிறந்தது.

1907 ஆம் ஆண்டு, பாரிஸ் நகரத்தில் நடைபெற்ற உலக சோஷியலிச மாநாட்டில், உலக மகளிர் அமைப்பின் செயலாளராகக் கிளாரா ஜெட்கின் தேர்ந்து எடுக்கப்பட்டார். 12 மாதங்கள் கழிந்தன. அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் அணிவகுத்து வந்தார்கள். ''எங்களுக்குத் தொழிற்சங்க உரிமை வேண்டும்; எங்களுக்கு வேலையில் நியாயமான நீதி கிடைக்க வேண்டும்'' என்று திரண்டு எழுந்து அவர்கள் குரல்

கொடுத்து வெற்றி பெற்றதை வாழ்த்திப் பாராட்டி, மூன்று ஆண்டுகள் கழித்து, அதே கிளாரா ஜெட்கின் சொன்னார், " **இனிமேல் இந்த நாள்தான் உலக மகளிர் நாள்**" என்று!

புரட்சிக்கு நுழைவாயில்

அவர் அறிவித்த ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு, உலகம் மற்றொரு புரட்சியைச் சந்தித்தது. ஆரோரா கப்பலில் பீரங்கிகள் முழங்கின, சோவியத் புரட்சி வெடித்தது. லெனின் வெற்றி முழக்கம் கிரெம்ளின் மாளிகையை எட்டியது. அந்த சோவியத் நாட்டில் புரட்சி நடைபெற்ற 1917 ஆம் ஆண்டு இதே மார்ச் மாதம் 8-ஆம் தேதி பெட்ரோகிராட் நகரில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் அணிவகுத்து வந்தார்கள், உரிமை வேண்டும் என்று அணிவகுத்து வந்தார்கள், ஒடுக்குமுறையை எதிர்ப்போம் என்று அணிவகுத்து வந்தார்கள். எந்த நாள் மகளிர் நாள் என்று கிளாரா ஜெட்கின் அறிவித்தாரோ அந்த மார்ச் 8 ஆம் நாள், பெண்கள் உயர்த்திய உரிமைப் பதாகை சோவியத் புரட்சிக்கு நுழைவாயில் ஆயிற்று.

1936 ஆம் ஆண்டு நாஜிகளின் ஸ்வஸ்திக் கொடி, ஐரோப்பியக் கண்டத்தில் உயர்ந்து கொண்டு இருந்த காலம். ஜெர்மனியின் சான்சிலராக இருந்த ஹிட்லர், சர்வாதிகாரத்தை உருவாக்கிக் கொண்டு இருந்த காலம். ஸ்பெயின் நாட்டில் ஃபிராங்கோ சர்வாதிகாரியாக ஆட்சி புரிந்து கொண்டு இருந்த காலம். ஃபிராங்கோவை எதிர்த்து 80,000 பெண்கள் மேட்ரிட் நகரில் ஊர்வலம் வந்தார்கள். அந்த நாள்தான் மார்ச் 8 ஆம் நாள்!

அதேபோல 1950 ஆம் ஆண்டு, ''இனிமேல் அணு ஆயுதம் உலகத்தின் உயிர்களைக் குடிக்கக்கூடாது, ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் வீசப்பட்ட அணுக்குண்டுகள் மனித குலத்தை அழித்துவிடக்கூடாது, இந்த ஆயுதங்களை அழிக்க வேண்டும்'' என்று மூன்று இலட்சம் பெண்கள் ஐரோப்பா கண்டத்தில் அஞ்சல் அட்டை அறப்போர் நடத்திய நாள் இந்த மார்ச் 8 ஆம் நாள்.

இதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. மார்ச் 8 ஆம் நாள், அடக்குமுறைக்குப் பலர் பலியாகி இருக்கிறார்கள். துப்பாக்கி முனைகளுக்குத் தங்கள் உயிர்களைத் தந்து இருக்கிறார்கள். உலக மகளிர் நாளில், அவர்களுக்கு வீரவணக்கம் செலுத்துகிறோம்.

உரிமை முரசு

இதே மார்ச் 8-ஆம் நாள்தான், 1950 ஆம் ஆண்டு ஈரானில் எண்பதாயிரம் பெண்கள், டெஹ்ரான் வீதிகளில் ஒன்று திரண்டு வந்து, ''அனைத்து

எண்ணெய்க் கிணறுகளையும் நாட்டு உடைமை ஆக்க வேண்டும்'' என்று உரிமை முரசு கொட்டிய நாள், இந்த மார்ச் 8 ஆம் நாள். இந்த நாளில்தான் நாம் மாநாடு நடத்தி இருக்கிறோம்.

மாநாடு நடத்தியதோடு மட்டும் அல்ல, சர்ச்சைக்குரிய கருத்துகளாக நான் கருதவில்லை. சிந்தனைக்கு உரிய கருத்துளை இங்கே பேசியவர்கள் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அந்தக் கருத்துகளின் அடிப்படையில் எங்கள் எண்ணங்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

தந்தை பெரியாரின் வீர வரலாற்றை இங்கே சொன்னார்கள். பத்து வயதுப் பெண் அவருடைய காலடியில் வந்து விழுந்து, ''மாமா எனக்கு ஏன் திருமணம் செய்து வைத்தீர்கள்?'' என்று கேட்டார். மனம் பதறிய தந்தை பெரியார், அவளுக்கு மறுமணம் செய்வது என்று முடிவு எடுத்த அந்த வரலாற்றை இங்கே சொன்னார்கள். பத்தினித் தெய்வம் கண்ணகி என்று நாம் அழைக்கிறோம். கண்ணகியின் சிலைதான் இந்த மாநாட்டில் நினைவுப் பரிசாக ரேணுகா சவுத்திரி, சுப்புலட்சுமி ஜெகதீசன் என்று கலந்து கொண்ட அனைவரின் கரங்களிலும் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த மேடையைப் பாருங்கள். இந்த மேடையில் மகளிருக்காக, மகளிர் உரிமைக்குப் போராடிய திராவிட இயக்க வீராங்கனைகளின் படங்கள் இருக்கின்றன. உலக அளவில் புகழ் பெற்ற அன்னை தெரசா, இந்திரா காந்தி போன்றோரின் திருவுருவப் படங்கள் இங்கே அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றன.

சேலஞ்சர் என்ற விண்கலம் விண்ணில் வெடித்துச் சிதறினாலும்கூட, மண்ணில் வாழும் மனிதர்களின் நெஞ்சமெல்லாம் நிலைத்து இருக்கின்ற கல்பனா சாவ்லா படமும் இங்கே அலங்கரித்துக் கொண்டு இருக்கிறது. கையில் சிலம்போடு மன்னனின் அவையில் நின்ற அந்தக் கண்ணகியின் வீரத்திருவுருவத்தையும் இங்கே இடம் பெறச் செய்து உள்ளோம். இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சமுதாய சிந்தனை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் செங்குட்டுவன் தம்பி இளங்கோ எழுதுகிறபோது இருந்த சமூக சூழ்நிலையை, நாம் மறப்பதற்கு இல்லை. விலை மகளிர், பொது மகளிர், வரைவின் மகளிர் என்று சமூகத்தில் பெண்கள் ஒரு பகுதியில் வாழ்ந்து கொண்டு இருந்த காலம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மாசாத்துவான் மகன் கோவலன், மாதவியின் வீட்டுக்குச் சென்றான். வடுநீங்கு பிறப்பின் மனையகம் மறந்து சென்றான்.

அஞ்செஞ் சீறடி அணிசிலம்பு ஒழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்

இது சிலம்பு வர்ணிக்கின்ற வருணனை. நாங்கள் நியாயப்படுத்த விரும்பவில்லை. கண்ணகி துயரத்தில் இருந்தாள். குலம்தரும் வான்பொருள் குன்றம் தொலைத்து நாடி வந்த போதும், துயரத்துடன் வந்தபோதும், நொந்து வந்த அந்தப் பெண், ''கவலைப்படாதீர்கள் போதும் நடந்தது நடந்து விட்டது; இதோ சிலம்பு இருக்கிறது வாழலாம்'' என்று சொன்னாள். இது புலவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டிய விஷயம். காலத்தின் அருமை கருதி அதற்குள் நான் அதிகமாகச் செல்ல விரும்பவில்லை.

எந்தக் கால்களில் சிலம்பு ஒலித்ததோ, எந்தச் சிலம்பு ஒலியில் அவன் கண்ணகியின் வீட்டில் மனம் மகிழ்ந்து இருந்தானோ, அந்தச் சிலம்பை எடுத்துக் கொண்டு இதை விற்றுவிட்டுக் கிடைக்கிற பணத்தைக் கொண்டு வாழலாம் என்று சொன்னாள்.

நடந்து விட்டது கேடு. செய்தவனோ கொற்றவனின் ஆணை கேட்டுச் செய்து இருக்கிறான். தகவல் வருகிறது வேந்தனின் உத்தரவு. ''கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று.'' அந்த வேந்தனின் ஆணை கேட்டுத்தான் கொலைக்களத்தில் கோவலனின் தலை துண்டாடப்பட்டது என்று அறிந்ததற்குப் பின்னரும் கூட, அரசன் அல்லவா? மணி முடி சூடிய மன்னன் அல்லவா? அணி தேர் புரவி ஆட்பெரும் படை கொண்ட அரசன் அல்லவா? அவன் உத்தரவு அல்லவா என்று எண்ணவில்லை அந்தத் தமிழ்ப் பெண். இது அநீதி, அக்கிரமம் என்று நினைத்தாள். அநீதியை எதிர்த்து முரசு கொட்டுகின்ற உணர்ச்சி. அந்த உணர்ச்சியின் காரணமாகத்தான், தங்கை அருள்மொழி சொன்னதைப் போல,

பெண்டிரும் உண்டுகொல்?
பெண்டிரும் உண்டுகொல்?
சான்றோரும் உண்டுகொல்?
சான்றோரும் உண்டுகொல்?
வைவாளின் தப்பிய
மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்?
தெய்வமும் உண்டுகொல்?

என்று கேட்டுக் கொண்டு சென்றது மட்டும் அல்ல,

அட, அறிவு கெட்டுப் போனவனே என்று அரசனைப் பார்த்து அறைகூவல் விட்டாளே, நடக்குமா? உலகத்தில் எந்த நாட்டில்? எந்தப் பண்பாட்டில்? கிரேக்கத்தில்? சுமேரிய நாகரிகம் வளர்ந்த பகுதியில்? நைல் நதிக்கரையில்? எகிப்தில், மஞ்சள் நதி பாய்கிற சீனத்தில் இப்படியொரு எண்ணம் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் உண்டா? கிடையாது.

'தேரா மன்னா' என்று விளிக்கிறாள் கண்ணகி. அவள் மதுரையை எரித்தது சரிதானா? என்று கேட்கிறார்கள் சிலர். அக்கிரமத்தை அழிக்கப் புறப்படுகின்ற ஆத்திரம் சில வேளைகளில் எல்லாவற்றையும் அழிக்கத்தான் செய்யும். இதை உலகம் சந்தித்து இருக்கிறது. நடைபெற்ற நிகழ்ச்சிகளை உலகம் முழுவதும் சந்தித்து இருக்கின்றன.

அதைப்போலவே அவள் ஆர்த்து எழுந்ததால் மட்டும் அல்ல, மன்னன் உயிர் விட்டான். மன்னவன் உயிர், செங்கோலை நிமிர்த்துச் சென்றது. அதிலும் அடங்கவில்லை அவள் ஆத்திரம். அக்கிரமத்துக்கு, அநீதிக்கு எதிராக அவள் எழுந்தாள். கனலாக மதுரையைச் சுட்டாள். ஊழித்தீயாக எழுந்தாள். ஆகவே இன்றைக்கு நாங்கள் இந்தச் சின்னத்தைக் கொடுக்கிறோம். இந்த நினைவுப் பரிசைக் கொடுக்கிறோம்.

இது சென்னை காமராசர் அரங்கத்தில் மட்டும் அல்ல, தமிழகத்தில் மட்டும் அல்ல, இந்திய பூபாகம் மட்டும் அல்ல, உலகம் முழுவதிலும், இந்த உலகத்தில் வாழ்கிற பெண்கள் கையில் ஏந்த வேண்டிய நினைவுச் சின்னம் இது. ஒவ்வொரு அரசும் கொடுக்க வேண்டிய நினைவுப் பரிசு ஒன்று உண்டு என்று சொன்னால், இந்தச் சிலையின் வடிவத்தைத்தான் கொடுக்க வேண்டும். வாழ்க்கையில் உலகத்தின் எந்தப் பகுதிக்கும் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைக்குமானால், இதே கருத்தை எங்கும் சொல்லுவேன். ஐ.நா. மன்றமே அங்கீகரிக்க வேண்டிய சின்னம்.

நெருப்பை உமிழ்ந்த சின்னம் என்று ஏன் இதைக் குறிப்பிடுகிறேன்? பெண்கள் நெருப்பால் அன்று முதல் இன்று வரை அழிக்கப்படுகிறார்கள். வரதட்சணைக் கொடுமையால் மண் எண்ணெய் அடுப்பில் மடிகிறார்கள். மண்ணில் விழுகிற நாள் முதல், மண்ணில் மடிகிற நாள் வரை, மங்கையருக்கு இப்புவி இழைக்கிற சோகங்களை உடைத்து, அழிக்கப் புறப்படுவீர் தோழியர்களே, என்று நீலாம்பிகை சுப்பையன் எழுதிய கவிதைப் புத்தகத்தைத்தான், இங்கே நாம் வெளியிட்டு இருக்கின்றோம்.

பெண்பாற் புலவர்கள்

மன்னர்களைத் திருத்திய பெண்பாற் புலவர்கள் வாழ்ந்தார்கள். மன்னர்களிடம் இடம் பெற்று இருந்த சமயக் கருத்துகளை, திலகவதியார் திருத்தியதாக நான் படித்து இருக்கிறேன். அரசருக்குப் புத்திமதி சொன்ன ஔவையார் வாழ்ந்த நாடு. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களில் பெண்பாற் புலவர்கள் பாடியவை 190 பாடல்கள்.

அள்ளூர் நன்முல்லையார், ஆதி மந்தியார், ஊண் பித்தையார், ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காவற் பெண்டு, காக்கைப் பாடினியார்,

நச்செள்ளையார், காமக்கணிப் பசலையார், குறமகள் இளவெயினி, நக்கண்ணையார், நெட்டிமையார், பாரி மகளிர், பொன் முடியார், மாறோக்கத்து நப்பசலையார், முடத்தாமக் கண்ணியார், வெள்ளி வீதியார் என எண்ணற்ற பெண் பாற்புலவர்கள் பாடினார்.

எடுத்த காரியத்தை முடிக்காவிடில், நாங்கள் தூக்கிச் செல்கிற ஆயுதங்களோடு பகைவர்களின் மதில்களைக் கடக்காவிடில், எதிரிகளின் கோட்டைகளை நாங்கள் கடக்காவிடில், எதிரிகளின் மதில்களைக் கடந்து இந்த ஆயுதங்களோடு செல்லாவிடில், அதுவரை நாங்கள் உணவு அருந்த மாட்டோம் என்று சொன்னவர் ஒரு பெண், பாடியவர் ஒரு பெண்.

அது மட்டும் அல்ல. இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், அன்னி மிஞிலி என்கின்ற ஒரு பெண், தன் தந்தையின் கண்களைப் பிடுங்கினார்கள் கோசர்களின் கூட்டம் என்பதற்காக, வஞ்சினம் கொண்டாள். களத்தில் உணவு அருந்தவில்லை. நல்ல உடைகள் உடுத்தவில்லை. பழிவாங்கி, அவர்களை ஒழித்துக் கட்டியதற்குப் பிறகுதான் உணவு அருந்தினாள் என்று அகநானூற்றில் 262 ஆம் பாடலில் பரணர் பாடுகிறார்.

வேதங்கள், புராணங்கள் நமக்குச் சொந்தம் அல்ல

இதையெல்லாம் நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன்? இத்தனைச் சிறப்புகள் உள்ள நாட்டில், கொடுமைகள் வந்தது எவ்விதம்? இடைக்காலத்தில் பெண்கள் துன்பம் அடைந்ததற்கு என்ன காரணம்? அதைத்தான் இங்கே விவரிக்க விரும்புகின்றேன். இந்த நாட்டின் இதிகாசங்கள், மநுஸ்மிருதிகள், வேதங்கள், புராணங்கள், உபநிஷத்துகள் இவை நமக்குச் சொந்தம் அல்ல. நம்முடைய பண்பாட்டுக்கும், இதற்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. நான் பேதப்படுத்துவதற்காக எதையும் சொல்லவில்லை. வரலாற்றை யாரும் மாற்றிவிட முடியாது.

நமது சிந்தனை வேறு. இங்கே மனைவிமார்களைச் சூதாட்டத்தில் பணயம் வைத்த வரலாறு எங்களுக்குக் கிடையாது. சுடலையில் போய்த் தாலியை விற்றுக் கொடுத்து, அதற்குப் பிறகுதான் தகனம் செய்ய முடியும் என்று கேட்ட அரிச்சந்திரப் புராணம் எங்களுக்குத் தெரியாது.

இங்கே தங்கை பேசினாரே அந்த மநுசுமிருதிகள், ரிக் வேதம், சாம வேதம், அதர்வண வேதம், யஜுர் வேதம் என்று சொல்லப்பட்ட நான்கு வேதங்கள். இந்த வேதங்களும், மநுசுமிருதிகளும் இதனுடைய கேடுகளைப் பற்றிப் பெரியார் சொன்னார். ஒரு பட்டியலையே குடியரசில் வெளியிட்டார். ‘‘கணவன் குடிகாரனாக, அயோக்கியனாக, போக்கிரியாக இருந்தாலும் அவனுக்கு

மனைவி பணிவிடை செய்யாவிட்டால், அவள் அலங்காரமாக உடை உடுத்தவோ, அவள் படுப்பதற்கு வசதியாக இடத்தைத் தேடவோ கூடாது. அவள் மூன்று மாத காலம் தண்டிக்கப்பட வேண்டும்.''

இதைச் சொல்லுவது மநுசுமிருதிதான். பால்ய காலத்தில் தகப்பனின் பராமரிப்பு, யவ்வன காலத்தில் கணவனின் பராமரிப்பு, கணவன் மடிந்ததற்குப் பிறகு பிள்ளைகள் பராமரிப்பு. சுயாதீனமாகப் பெண்கள் இருக்கக்கூடாது. இதைச் சொல்வது மநுசுமிருதிதான்.

வேதங்கள் விதைத்த நஞ்சு

தாய், தங்கை இவர்களோடு கூட ஓர் ஆண் தனியாக உட்காரக் கூடாது. கேட்டால் அதிர்ச்சி அடைவீர்கள். மாதர்கள் விபசார தோஷம் உடையவர்கள். மாதர்கள் சிருங்கார சேஷ்டைகளால் மக்களைக் கெடுப்பவர்கள், மாதர்கள் கற்பு நிலை இல்லாதவர்கள். மனத்திண்மை இல்லாதவர்கள், நிலையான புத்தி இல்லாதவர்கள் என்று, இந்த மநுஸ்மிருதிகளும், வேதங்களும் விதைத்த நஞ்சை, விவரித்துக்கொண்டே போகலாம். இந்த நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் நெஞ்சத்தில் அந்த நஞ்சு விதைக்கப்பட்டது.

இந்த நாட்டில் கோடானு கோடி மக்கள் பின்பற்றிப் பார்ப்பது - அதிகமாக சொல்லப்படுவது மகாபாரதமும், இராமாயணமும்தான். நான் ஆபாசக் கதைகளைப் பேசுபவன் அல்ல. ஆனால், இவையெல்லாம் ஆபாசக் களஞ்சியம்தானே? சொல்வதில் என்ன தவறு? பாண்டு, திருதராஷ்டிரன் பிறந்ததை - விதுரன் பிறந்ததை நான் விவரிக்க முடியுமா? நல்ல சபையில் என் தங்கை, அக்காமார்கள் இருக்கக்கூடிய சபையில் என்னால் பேச முடியாது.

வீரப்போட்டியில், வில் வித்தையில் இலக்கினை நோக்கி அர்ச்சுனன் வில்லை வளைத்தான், அம்பைத் தொடுத்தான், அடித்தான், அந்த மீன்பொறி கீழே விழுந்தது என்று கதையைச் சொல்லி விட்டு, பாஞ்சால வேந்தன் துருபதன் மகள் திரௌபதைக்கு அர்ச்சுனன் கணவன் ஆனான் என்று சொன்னபோது, தாய் குந்தி சொன்னாளாம்: ''ஐந்து பேரும் அவளைப் பங்கிட்டுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னதற்காக - ஐவருக்கும் பத்தினியானாளே, இவை எல்லாம் இந்த நாட்டில் கோடானு கோடி மக்களிடத்தில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகச் சொல்லப்பட்ட புராணக் கதைகள்தானே?

தருமன் நாட்டை இழந்தான். அரண்மனையை இழந்தான். அரசினை இழந்தான். தம்பிமார்களை இழந்தான். தன்னையும் இழந்தான். அனைத்தையும் இழந்ததற்குப் பிறகு, பாஞ்சாலியைப் பகடையில் வைத்தான். தோல்வியைச் சந்தித்தான். பாஞ்சாலியை இழுத்துக் கொண்டு சபைக்கு வந்தார்கள். துச்சாதனன் துகில் உரிந்த போது, திரௌபதையைப்

பாதுகாப்பதற்கு ஆடைகளை, வண்ண வண்ணக் கோலத்தில் அள்ளித் தந்தான் கண்ணன்.

ஆனால், அந்தக் கண்ணன் நாட்டில் கொடுமைகள் நடக்கிறபோது வருவதில்லை. இதையே பாரதி சொல்கிறபோது,

வீரமிலா நாய்கள், விலங்கம் இளவரசன்
தன்னை மிதித்துத் தராதலத்தில் போக்கியே
பொன்னை அவள் அந்தப்புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்.

என்று கூட ஆத்திரத்தில் சொன்னான்.

இதைச் சொல்லக் காரணம், அடிமைப் பொருளாக, பணயப் பொருளாக ஒரு பெண் ஆக்கப்பட்ட நிகழ்ச்சி இந்த நாட்டில் நடந்து இருக்கிறது. நான் காவியங்களைக் காவியமாகப் பார்க்கிறவன். ஓமரின் இலியட்டைப் படிப்பது போல, ஓமரின் ஒடிசியைப் படிப்பது போலக் கம்பனில் காவியம் இருக்கிறது. அந்தக் காவியத்தில் சில நயமான சொற்கள் வந்து விழுகின்றன. வால்மீகியின் கதையை நாட்டுக்கு எப்படி எல்லாம் மாற்றி எழுதினாலும் கூடப் பண்டிதர்கள் அதிகமாகச் சொன்ன ஒரு செய்தி. தந்தை பெரியார் அவர்கள் குறிப்பை, தங்கை அருள்மொழி அவர்கள் விவரித்தார்கள். காலத்தின் அருமையினால் அதைச் சொல்ல அவர்களுக்கு நேரம் இல்லை.

கம்ப இராமாயண - யுத்த காண்டத்தில் எல்லாம் முடிந்தது. கும்பகர்ணன் மடிந்தான். இந்திரஜித் மடிந்தான். மாவீரன், மானமுள்ள வேந்தன் - இலங்கை வேந்தன் மடிந்தான். அதற்குப் பிறகு அசோக வனத்தில் இருந்து, சீதையை அழைத்துக் கொண்டு வருகிறார்கள். சீதையைப் பார்த்து, இராமன் சொல்கிறான்.

"ஊண்திறம் உவந்தனை;
ஒழுக்கம் பாழ்பட,
மாண்டிலை; முறைதிறம்பு
அரக்கன் மாநகர்
ஆண்டு உறைந்து அடங்கினை;
அச்சம் தீர்ந்து இவண்
மீண்டது ஏன்? நினைவு, "எனை,
விரும்பும்" என்பதோ?'

இந்தப் பாட்டை எந்தப் பண்டிதரும் நாட்டில் சொல்வது கிடையாது. **"ஒழுக்கங்கெட்டவளே, கற்பு இழந்தவளே" என்று நான் சொல்லவில்லை, சீதையைப் பார்த்து இராமன் சொல்கிறான்.** சொன்னதாகக் கம்பன் எழுதி

இருக்கிறார். நெருப்பை அல்லவா அள்ளிப் போட்டு இருக்கிறார். இது கதை, கற்பனைக் காவியம்தான். ஆனால், நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் இதை நம்புகிற காரணத்தால் சொல்கிறேன்.

“நீ இலங்கையில் அசோக வனத்தில் நன்கு தின்று மிகவும் சந்தோஷமாக இருந்தாய். நீ சாகவில்லை. சாகாமல் உயிரோடு வந்து இருக்கிறாய். முறையற்ற அரக்கனின் நகரத்தில், அங்கேயே மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாய். இப்போது அவன் செத்துப் போன பிறகு, அச்சம் தீர்ந்து, மீண்டும் நான் உன்னை விரும்புவேன் என்று நினைத்து இங்கே வந்தாயா? ஏன் இங்கே வந்தாய்? யார் இங்கே உன்னை வரச் சொன்னார்கள்? நீ பிறந்தது மண்ணில்; உன் குலத்தின் புத்தி, உனக்குக் கற்பு, ஒழுக்கம், பண்பு என்று எதுவும் கிடையாது. நீ சாக வேண்டுமானால் சாவு. எங்கு போக வேண்டுமானாலும் போ” என்று சொன்னான் இராமன்.

இதை விடக் கொடுமை இருக்க முடியுமா? அங்கே இருந்தது சீதையின் குற்றம் அல்ல.

இவ்வளவும் இராமன் சொன்னதற்குப் பிறகு, சீதை கூறுகிறாள். “நான் அங்கு இருந்த நிலையைப் பற்றிச் சொல்லவில்லையா? நான் இருந்த தவம் எல்லாம் போயிற்று. நான் இனி வாழ வேண்டியது இல்லை, தீயை மூட்டு” என்று இலக்குவனனைப் பார்த்து, “தீயிடுக” என்றாள். அவன் அண்ணனைப் பார்த்தான். அதற்கு இராமன் ‘நீ தீயை மூட்டு’ என்று சொன்னான். அங்கே தீ மூட்டப்பட்டது. சீதை தீயில் இறங்கினாள். அன்று மூட்டிய தீ இன்று வரை மண் எண்ணெய் அடுப்பு வரை எரிந்து கொண்டு இருக்கிறது.

அவள் தீயில் இறங்கினாள். அயோத்தி நகரத்தில் கூட அவமானச் சொல் வந்துவிட்டதற்காக, சீதையை மீண்டும் காட்டுக்கு அனுப்பி வைத்தான் இராமன் என்றுதானே இராமாயணத்தில் எழுதி வைத்தார்கள். உடன் கட்டை ஏறுகிற பழக்கம், உயிர்களைப் பறிக்கிற பழக்கம், சின்ன வயதில் திருமணம் செய்து வைக்கிற கொடுமை, விதவைக்கு வாழ்வு இல்லை, அவள் மரக்கட்டையை விட மோசமாக வாழ வேண்டும். அதைவிடக் கொடுமை, உயிரோடு சிதையில் தூக்கிப் போடுவது. சதி என்னும் பெயரில் அந்தக் கொடுமை நிகழ்ந்தது.

பெண்களுக்குச் சொத்து உரிமை

இந்தக் கொடுமைகளை எதிர்த்து, இராஜாராம்மோகன்ராய் துடித்து எழுந்தார். சீர்திருத்தவாதிகள் புறப்பட்டார்கள். ஆயினும்கூடவிறகுக் கட்டைகளை அடுக்கி, அதில் உயிரோடு போட்டு எரிக்கிற கொடுமை நாட்டில் பல இடங்களில் இருந்தது. பெண்கள் சமுதாயம் எப்படிப்பட்ட நிலைமைக்கு

ஆளாகி வந்து இருக்கிறது என்பதற்காகத்தான் இங்கே சகோதரிகள் சொன்னார்கள். இந்த நிலைமையில் நான் கண்ணகியைப் பார்க்கிறேன்.அங்கே பெண்களைத் தீயில் எரித்தார்கள், இங்கே கண்ணகி அக்கிரமத்தை எதிர்த்துத் தீயை மூட்டினாள் என்பதற்காகத்தான் நாங்கள் நினைவுப் பரிசாகக் கண்ணகியின் சிலையைக் கொடுத்து இருக்கிறோம்.

பெண்களுக்கு எதிரானக் கொடுமைகளைக் கண்டு தந்தை பெரியார் கொதித்து எழுந்தார்; அடிபீடத்தைத் தகர்க்கச் சொன்னார். **'தீ பரவட்டும்'** என்றார் அண்ணா. இந்தக் கொடுமைகள் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொன்னார்கள். மகளிர் நலனுக்காக 1929 ஆம் ஆண்டில் செங்கற்பட்டில் நடைபெற்ற முதலாவது சுயமரியாதை மாநாட்டில், **'எந்தப் பகுதியிலும் பெண்களுக்குச் சொத்து உரிமை வேண்டும்'** என்ற தீர்மானத்தை வகுத்திடக் காரணமாக இருந்த அறிவாசான் பெரியாரின் பெயரைச் சொல்லி நாங்கள் இந்த மாநாட்டை நடத்திக் கொண்டு இருக்கிறோம்.

1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் சுயமரியாதை மாநாடு. 1930 ஆம் ஆண்டு ஈரோட்டில் மாநாடு. 1931 ஆம் ஆண்டும் மாநாடுகள். அடுத்தடுத்து மாநாடு. இம்மாநாடுகளில் எல்லாம், காவல் துறையிலும், இராணுவத்திலும் சேருவதற்கு பெண்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதற்குத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பெண்கள் தங்கிப் பயில வேண்டும் என்பதற்காகத் தீர்மானம். இந்த முற்போக்குத் தீர்மானங்களை எல்லாம் முன் வைத்து, சுயமரியாதை இயக்கம், பெண் அடிமையை ஒழிப்பதற்கு, பெண்களும் சமத்துவம் பெற்று வாழ்வதற்காகப் பணி ஆற்றியதைக் கொண்டு, வழிமுறையாக ஒரு முறையை வகுத்துக் கொண்டு இருக்கிற மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்த மாநாட்டை நடத்திக்கொண்டு இருக்கிறது.

உலகம் முழுவதிலும் மகளிர் விழிப்பு உணர்வு ஏற்பட்டது. அதன் விளைவாகத்தான் இரண்டாம் உலகப் போர் முடிந்ததற்குப் பின்னர், மனித உரிமைகள் சாசனத்தை வகுப்பதற்கு 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதி மனித உரிமைகள் பட்டயம் பிரகடனம் செய்யப்பட்டது. அதனுடைய முதலாவது பிரிவு தயாரிக்கப்படுகிறபோது எலெனார் ரூஸ்வெல்ட் அம்மையார் அதில் முக்கிய பங்கு வகிக்கிறார். முதல் பிரிவு எப்படி இருக்க வேண்டும்? என்றபோது, அமெரிக்க அரசியல் சட்டத்தின் முதல் பிரிவையே இதில் போட வேண்டும் என்று சிலர் சொல்கிறார்கள்.

'All men are created equal.' இது அமெரிக்க அரசியல் சட்டத்தின் முதல் வரி. இவ்வரியைப் போடுவதற்கு எதிர்ப்பு கிளம்புகிறது. **இந்திய நாட்டின் பெண் பிரதிநிதிதான்** அந்த எதிர்ப்பைக் கிளப்புகிறார். **"All men"** என்று

நீங்கள் போடக்கூடாது. பெண்களையும் அதில் நீங்கள் சேர்க்க வேண்டும் என்கிறார். அதன் விளைவாகத்தான், **'All humanbeings'** என்று சாசனம் தொடங்குகிறது.

''All human beings are born free and equal in dignity and rights. They are endowed with reason and conscience and should act towards one another in a spirit of brotherhood.''

இதுதான் மனித உரிமைகள் பட்டயத்தின் முதலாவது பிரிவு.

பாரதியைத் திகைக்க வைத்த நிவேதிதா

உலகத்தில் பெண்கள் சமுதாயத்தில் சேவை செய்ய எத்தனையோ பெண்மணிகள் வந்தார்கள். பிளாரன்ஸ் நைட்டிங்கேல், கியூரி அம்மையார், நிவேதிதா, அன்னை தெரசா போன்ற எத்தனையோ பேர்கள் சீர்திருத்தக் கருத்துகளுக்காக வந்தார்கள். நிவேதிதா என்றவுடன் நினைவுக்கு வருகிறது. 1906 ஆம் ஆண்டு கல்கத்தாவில் காங்கிரஸ் மாநாடு. அந்த மாநாட்டுக்குச் சுப்பிரமணிய பாரதியார் ஒரு பிரதிநிதியாக - பார்வையாளராகத்தான் செல்கிறார். மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியும் சாதாரண பிரதிநிதியாகச் செல்கிறார்.

அந்த மாநாட்டில் நிவேதிதாவைச் சந்திக்கின்றார் பாரதி. ''நான் ஒரு கவிஞன். இந்தியாவின் தெற்குப் பகுதியில் இருந்து வருகிறேன்'' என்று தன்னைத்தானே அறிமுகம் செய்து கொள்கிறார். சில மணி நேர உரையாடலுக்குப் பிறகு நிவேதிதா இவரிடம் பேசுகிறார். ''உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா? என்றார். 'ஆம்' என்றார் பாரதியார். 'உங்கள் மனைவி எங்கே?' என்று கேட்டபோது அவர் மனம் திறந்து வெளிப்படையாகப் பேசுகிறார். ஒளிவு மறைவு எல்லாம் கிடையாது. ''நாங்கள் பொதுவாக இப்படியெல்லாம் அழைத்துக் கொண்டு போவது கிடையாது. இது எங்கள் நாட்டு வழக்கம்'' என்றார் பாரதி.

உடனே நிவேதிதா கேட்கிறார். ''50 சதவீதமாக இருக்கிற ஆண்களுக்கு மட்டும்தான் விடுதலை கேட்கிறீர்களா? 50 சதவீதமாக இருக்கிற பெண்களுக்கு விடுதலை கிடையாதா? இந்த பத்தாம்பசலித்தனமான மனப்பான்மையை நீங்கள் விட்டொழிக்க வேண்டாமா?'' என்று கடுமையான வார்த்தைகளில் சாடியதாகப் பாரதியார் கூறுகிறார்.

''மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்''
''நாணமும், அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்''

என்று எழுதினார் பாரதி.

அதைப்போல, மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி அவர்தம் வாழ்வில் மறக்க முடியாதவர்கள் தமிழ்ப் பெண்கள். தென் ஆப்பிரிக்க நாட்டில் நடைபெற்ற ஓர் சத்தியாகிரகப் போராட்டத்தைப் பற்றிப் புத்தகம் எழுதி இருக்கிறார். ''Satyagraha in South Africa'' என்பது அதன் பெயர். அந்தப் புத்தகத்தில் குறிப்பிடுகிறார். "நாங்கள் அறப்போராட்டம் நடத்துவதற்காக, சத்தியாகிரகம் செய்வதற்காக, ஏராளமான தமிழ்ப் பெண்களோடு திரண்டு சென்று கொண்டு இருக்கிறோம். நாங்கள் நடந்து செல்கிறபோது, ஓர் இடத்தில் ஆறு குறுக்கிடுகிறது. அந்த ஆற்றில் தண்ணீர் வேகமாக ஓடுகிறது. நாங்கள் அதைக் கடந்து போராட்டம் நடக்கிற இடத்துக்குச் செல்ல வேண்டும்.

காந்திக்கு உதவிய தமிழ்ப்பெண்கள்

அப்போது ஒருவருக்கொருவர் கரங்களைப் பற்றிக் கொண்டு இந்த ஆற்றைக் கடந்து விடலாம் என்று நினைத்து ஆற்றில் கடந்து செல்கிறோம். அப்போதுதான் எதிர்பாராதவிதமாக அந்த விபத்து ஏற்பட்டது. ஒரு பெண் கையில் இருந்த ஆறு மாதக் குழந்தை, தண்ணீரின் வேகம் அதிகமானவுடன் நிலை தடுமாறி ஆற்றில் விழுந்து விடுகிறது. எப்படியாவது குழந்தையைத் தேடுங்கள் என்று பதற்றத்தோடு சொன்னேன். அந்தப் பெண் சொன்னாள். 'இனி அந்தக் குழந்தை கிடைக்காது. அது இறந்து போய் இருக்கும். மற்றவர்களையாவது காப்பாற்றுங்கள். வெள்ளம் வருவதற்குள் சென்று விடலாம். போராட்ட இடத்துக்குச் செல்ல வேண்டும். கடமையைச் செய்வோம். குழந்தையைத் தேட வேண்டாம். அது முடிந்து விட்டது'' என்று சொன்னாள்.

என் உள்ளம் பதற்றம் அடைந்தது. என்னுடைய வாழ்நாளில் அந்தக் காட்சியை மறக்க முடியவில்லை. அந்தத் தமிழச்சியை நான் மறக்க மாட்டேன். தியாக உணர்வு என்பதை அதில் இருந்து நான் பெற்றேன். தன் சொந்தக் குழந்தையைத் தண்ணீரில் விடுவதற்கு மனம் ஒருப்படாது. அவள் பதறிப் போய்த் தேட வேண்டிய நேரத்தில் மற்றவர்களின் எதிர்காலத்தைப் பற்றிக் கவனிப்போம், கடமையைப் பற்றிச் சிந்திப்போம் என்று சொன்ன கருத்து, என்னுடைய உள்ளத்தில் ஆழமாக ஒரு கருத்தை விதைத்தது.

அதுமட்டும் அல்ல. தில்லையாடி வள்ளியம்மைக்குக் கடுமையான நோய். சிறைக்கு உள்ளேயே இறந்து போவாள் என்ற எண்ணத்தில் கடைசி நேரத்தில் அவளைத் தூக்கிச் சிறைக்கு வெளியில் அனுப்புகிறார்கள். வள்ளியம்மை மெலிந்து, மரணத்தோடு போராடிக் கொண்டு இருக்கிற அந்த உடலைத் தூக்கிக் கொண்டு ஜெயில் வாசலில் இருந்து வருகிறார்கள். சிகிச்சைக்காகச் சேர்க்கிறார்கள். பக்கத்தில் காந்தியார் இருக்கிறார். அவர் அதிகமாகக் கவலைப்படுகிறார்.

அப்போது, வள்ளியம்மை காந்தியாரைப் பார்த்துச் சொன்னார்: ''நீங்கள் கடமையைச் செய்யுங்கள். வாழ வேண்டியவர்களுக்காக நேரத்தைச் செலவழியுங்கள். என் கதை முடிந்து விடும். விடுதலைக்காக, இங்கிருக்கும் மக்களின் உரிமைக்காக நீங்கள் போராடுகிறீர்கள். அந்தக் கடமையைச் செய்யுங்கள்'' என்று சொன்னாள். அதையும் மறக்க முடியாது என்று கூறிவிட்டு இன்னொரு இடத்தில் காந்தியார் தெரிவிக்கிறார்.

''என்னவோ தெரியவில்லை. இந்தத் தமிழ்ப் பெண்களோடு நான் பழகுகிறபோது, அவர்கள் காட்டுகிற அன்பைப் பார்க்கிறபோது, என் மனதில் ஏற்படுகிற ஒரு பாசம். ஏதோ பூர்வஜென்ம பந்தம் போல் இருக்கிறது. இவ்வளவு பாசத்தோடு இருக்கிறார்கள்.'' இதுவும் அந்தப் புத்தகத்தில் வருகிறது.

வாள் ஏந்திய மகளிர்

இந்த மண்ணில் உரிமைகளுக்காக வாள் ஏந்திப் போராடியவர்கள் பெண்கள். கையில் வாள் ஏந்தி வெள்ளையனை எதிர்த்துப் போர்க்களத்தில் புகுந்து, தன் கணவர் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டதற்குப் பிறகும் யுத்த களத்தில் நின்று வெற்றி பெற்றாரே வீர நங்கை வேலு நாச்சியார், அவர் வாள் ஏந்திப் போர் புரிந்தவர்.

ஆர்பியஸ் நகரத்தைப் பெரும்படை சூழ்ந்து கொண்டது என்று கேள்விப்பட்டவுடன், படைக்குத் தலைமை தாங்கிக் கவசம் அணிந்து சென்று, அந்த **ஆர்பியஸ்** நகரத்தைக் கைப்பற்றுவதற்காகப் போகிறபோது, குறுக்கே ரோடார்ஸ் கோட்டை ஒன்று வருகிறது. ஜோன் ஆப் ஆர்க் கையில் ஆயுதத்தோடு, தன் படையோடு முன்னணியில் நிற்கிறார். அகழி இருக்கிறது. கடந்து செல்ல வேண்டும். எதிரிப்படையின் பலம் அதிகம். அகழியில் இவளே குதிக்கிறாள். முதலைகளிடம் இருந்து தப்புகிறாள். பாய்ந்து வரும் ஈட்டி, அம்புகளில் இருந்து தப்புகிறாள். ஏணியைத் தூக்கி அவளே அந்தக் கோட்டைச் சுவரில் போடுகிறாள். கோட்டைச் சுவரில் ஏறி, இரண்டாவது படியில் கால் வைக்கிறாள். அம்பு ஒன்று பாய்ந்து வருகிறது. தோள்பட்டையைக் கிழிக்கிறது. இரத்தம் பீறிடுகிறது.

அப்போதும் அவள் கலங்கவில்லை. அந்த அம்பைப் பிடுங்கி எறிந்துவிட்டு மேலும் செல்கிறாள். அந்த ஏணியின் உச்சிப்படிக்குச் சென்று, கோட்டையின் உச்சியை நெருங்குகிற நேரத்தில் தோளுக்கும், கழுத்துக்கும் இடையில் கூர்மையான அம்பு ஒன்று வந்து பாய்கிறது. இரத்தம் பீறிட்டுப் பாய்கிறது. அந்த அம்பைப் பிடுங்கி எறிகிறாள். அதற்கும் மேல் அவள் மதில் மேல் நிற்கிறாள். உடன் இருக்கிற அத்தனை வீரர்களுக்கும் மெய்சிலிர்க்கின்றது

அந்தக் காட்சி. அனைவரும் அதே முறையில் புறப்படுகிறார்கள். ரோடர்ஸ் கோட்டை வீழ்ந்தது. ஆர்பியஸ் நகரத்தைக் கைப்பற்றினார் ஜோன் ஆப் ஆர்க் இப்படிப்பட்ட வீரத்தை அந்தப் பெண் நிகழ்த்தினாள்.

கடைசியில் மற்றவர்கள் சூழ்ச்சியால் அவள் வீழ்த்தப்பட்டு, ஆங்கிலேயர்களால் சிறைபிடிக்கப்பட்ட பிறகு, ''இவள் சூனியக்காரி, பேய்களோடு வாசம் செய்கிறவள்'' என்று சொல்லி, விறகுக் கட்டைகளை அடுக்கி உயிரோடு அவளை அதில் போட்டு, நெருப்பு வைத்துக் கொளுத்தினார்கள். 1731 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அத்தகைய வீர உணர்ச்சி மகளிர்க்கு உண்டு.

பெண்கள் பொங்கி எழுந்தால் இந்தப் பூமி என்னாகும்?

அதைத்தான் ஜான்சிராணி இலட்சுமிபாய் நிலைநாட்டினார். குவாலியர் கோட்டையைக் கைப்பற்றியபோது, ஜான்சிராணி கவசம் அணிந்து, வாள் ஏந்தி, போராடிக் கடைசிவரையிலும் மண்டியிடாமல், தன் வீரர்கள் எல்லாம் மடிந்ததற்குப் பிறகு, துரோகத்தால் தான் சாய்க்கப்பட்டபோதும் கூடக் கடைசி நிமிடம் வரை போராடினாள். உடம்பெல்லாம் அம்புகள் பாய்ந்த நிலையில் உயிர்விட்டார் ஜான்சிராணி இலட்சுமி பாய்.

அதைச் சுட்டிக்காட்டித்தான் நேதாஜி, தமிழ்ப் பெண்கள் படைக்கு **''ஜான்சிராணி ரெஜிமென்ட்''** என்று பெயர் சூட்டினார். ஜான்சிக்காக அன்றைக்கு இலட்சுமிபாய் இருந்தார். இந்தியப் பெண்கள் விடுதலைக்காக ஆயிரம் ஆயிரம் இலட்சுமிபாய்களை நாம் உருவாக்க வேண்டும் என்று நேதாஜி திரட்டிய அந்தப் படைக்குத் தலைமை தாங்கியவர் தமிழகத்தில் பிறந்த பெண் கேப்டன் லட்சுமி.

சாதனை மகளிர்

எதிலும் நம்முடைய சகோதரிகள் சளைத்தவர்கள் அல்ல. எவரெஸ்ட் உச்சியில் முதலாவதாக ஏறிய பெண் **பச்சேந்திரி பால்.** டென்னிஸ் விளையாட்டில் **சானியா மிர்சா** இந்தியாவுக்கு இப்போது புகழைத் தேடிக் கொடுத்து இருக்கிறார். **பி.டி. உஷா** தங்கப் பதக்கங்களை அள்ளிக் குவித்தார். இந்த மண்ணில் மறைந்தாலும் அவருடைய கீதம் காற்றில் என்றென்றும் கலந்து இருக்கிற இசையரசி **எம்.எஸ். சுப்புலெட்சுமி** அவர்கள் நினைவுக்கு வருகிறார். அவர் 'பாரத ரத்னா' பட்டம் பெற்றவர். இந்திரா காந்தி அம்மையார் போன்றோர் நமது நாட்டுக்குப் பெருமை தேடிக் கொடுத்து இருக்கிறார்கள்.

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், **'Missing Women'** என்ற புத்தகத்தில் பத்துக் கோடி பெண்கள் மாயமாகப் போய்விட்டார்கள் என்று சொல்கிறார்.

கொல்லப்பட்டு, அழிக்கப்பட்டு தேடுவாரின்றிப் போய் விட்டார்கள். இதில் மூன்று கோடிப் பெண்கள் இந்தியர்கள். நாள்தோறும் காணாமல் போய்க் கொண்டு இருக்கிறார்கள்' என்று சொல்கிறார். நாள்தோறும் பெண் குழந்தைகள் கொலை செய்யப்படுகிறார்கள். இது ஆர்த்து எழ வேண்டிய நேரம். நீங்கள் கொடுக்கிற உரிமைக் குரலுக்கு, நாங்கள் உங்கள் பக்கத்தில் துணையாக இருப்போம். நீங்கள் அஞ்சிடத் தேவை இல்லை.

பெண்களுக்கு எங்கே பாதுகாப்பு இருக்கிறது? பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தால் பாலியல் கொடுமை மட்டுமா? வேலைக்குச் சென்று திரும்புகின்ற பெண்களின் கற்புக்கு எங்கே பாதுகாப்பு இருக்கிறது? கற்பழித்துக் கொடூரமான முறையில் கொலை செய்யப்படுகிறார்கள். பெண்கள் மட்டுமா? வளர்ந்து வரும் சின்னஞ்சிறு பெண் குழந்தைகளுக்கும் கூட இந்த நிலைமை ஏற்படுகிறது. வரதட்சணைக் கொடுமைகளும், அதனால் விளைகின்ற கேடுகளும், வீடுகளில் நடக்கின்ற அக்கிரமங்களும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகின்றன.

ஒரு பெண்ணின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு செய்தியாளர்கள் எழுத வேண்டும். விமர்சனங்களை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். நாங்கள் சிறையில் இருந்த 19 மாத காலத்தில், நாட்டின் கோடிக்கணக்கான மக்கள் மனங்களில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பை நிலை நிறுத்தியது தமிழ்ப் பத்திரிகைகள், ஆங்கிலப் பத்திரிகைகள், வார ஏடுகள், தின ஏடுகள். 19 மாத காலமும் எங்கள் இயக்கத்தை நாட்டு மக்களுக்கு நினைவூட்டிக் கொண்டு இருந்தவர்கள் இந்த நாட்டின் பத்திரிகையாளர்கள். அவர்களுக்குத் தலைவணங்கி இந்தக் கட்டத்திலும் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு செய்தி வருகிறது. பெற்றோருக்கு ஒரே பிள்ளை. நன்றாகப் படித்தவன். திருமணமானவுடன் தம்பதிகள் தேனிலவுக்குச் செல்கிறார்கள். அங்கே குளியல் அறையில் அந்தக் கணவன் இறந்து விட்டான். அதை எந்த வகையில் செய்தி போடுகிறார்கள்? அதை நான் இங்கே விவரிக்க விரும்பவில்லை. வாழ்க்கை இழந்துவிட்டாளே அந்த மங்கை, அரும்பிய நேரத்தில் அழிக்கப் பட்டுவிட்டதே அந்தத் தங்கை. அவள் உள்ளம் என்ன பாடுபடும் என்றுஎழுதுகோலைப் பிடித்து எழுதுகிறபோது ஒரு நிமிடம் சிந்தித்தார்களா? வயாகரா மாத்திரை சாப்பிட்டுவிட்டுக் குளியல் அறைக்குள் சென்றார்கள் என்று எழுதுவதற்கு எப்படி மனம் வந்தது? சொந்தக் கற்பனையைச் செய்தியாக எழுதலாமா? நம் தங்கை, நம் பிள்ளை என்றால் நாம் எழுதுவோமா? பத்திரிகைகள் மட்டும் அல்ல வெள்ளித்திரை, சின்னத் திரை போன்ற ஊடகங்கள், காமப் பொருளாக, போதைப்பொருளாக, மோகப்

பொருளாகப் பெண்களைக் காட்டி அவர்களை இழிவுபடுத்துகிற ஒரு பண்பாடு வளர்க்கப்படுகிறது.

இதனுடைய விளைவு என்ன?

நாம் கணினி உலகத்தில் வாழ்கிறோம். சமத்துவம் வேண்டும் என்று சொல் கிறோம். ஆனால், பெண்களைச் கொச்சைப்படுத்தி, இழிவுபடுத்துகின்ற நிலைமைகள் வளருகின்றது. எந்தெந்த விதத்தில் துன்பங்கள். வேலைக்குச் செல்கிற பெண்களின் மீது எத்தனை வக்கிரமானப் பார்வைகள், உரசல்கள். அந்தப் பெண்களால் வெளியில் சொல்ல முடிகிறதா? பேருந்து களில், நடைபாதைகளில், கூட்டமான இடங்களில், கடை வீதிகளில் செல்கிறபோது, ஒவ்வொரு பெண்ணும், ஒவ்வொரு நாளும் அடைகின்ற துன்பங்கள் அவள் உள்ளத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைக்கின்றன. அண்ணன், தகப்பனிடம் சொல்ல முடிகிறதா? சொல்ல முடியாது. சொல்லக் கூசுகிறாள்.

துணை இருப்போம்

காவல் நிலையத்துக்குச் செல்ல முடியுமா? சென்றால் பெண்களுக்குப் பாதுகாப்பு உண்டா? அதுவே வெட்கக் கேடான விஷயமாகி விடும். இத்தனையும் பெண்கள் நாள்தோறும் அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் கொடுமைகள் நீக்கப்பட வேண்டும் என்று சொன்னால், அக்கிரமம் செய்கின்ற கரங்கள் முறிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், மங்கையரே நீங்கள் ஆர்த்தெழுங்கள். உங்களுடைய போர்க்களத்துக்கு நாங்கள் துணையாக இருப்போம்.

பெண்கள் இட ஒதுக்கீடு பற்றி இங்கே பேசினார்கள். அதுகுறித்து, இந்த மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம்.

எங்கள் கடமைகள் அதோடு முடிந்து விடுவது இல்லை. நாங்கள் மகளிர் உரிமை, மகளிர் நலன், மகளிர் பாதுகாப்பு ஆகியவற்றிற்குப் பணியாற்றுவதோடு, திராவிட இயக்கக் கொள்கைகளைப் பாதுகாப்பதும் எங்கள் நோக்கம் ஆகும். எங்கள் இலக்கை அடைய தன்னலமற்ற உணர்வோடு, தியாக உணர்வோடு இந்த இயக்கத்தை நாங்கள் நடத்திச் செல்கிறோம். இந்த மகளிர் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய அன்புச் சகோதரிகளுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, மகளிர் உரிமைப்போர் வெல்லட்டும் எனக் கூறி விடை பெறுகிறேன்,

(உலக மகளிர் நாளில், 08.03.2005 அன்று, சென்னை காமராசர் அரங்கில் நடைபெற்ற மறுமலர்ச்சி மகளிர் மாநாட்டில், வைகோ ஆற்றிய உரை)

தீர்மானங்கள்

இரங்கல்

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள், ஆழிப் பேரலை (சுனாமி) தாக்கியதால், இந்தியா, இந்தோனேஷியா, இலங்கை, மாலத்தீவுகள், தாய்லாந்து, சோமாலியா ஆகிய நாடுகளின் கடலோரப் பகுதிகள் பேரழிவுக்கு உள்ளாயின. ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர். இயற்கையின் சீற்றத்தால் பேரா இயற்கையில் அமிழ்ந்துபோய், தமது இன்னுயிரை இழந்தவர்களுக்கு இம்மாநாடு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

தீர்மானம் எண் 1

தியாக வேங்கைகளுக்குப் பாராட்டு

தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்ததால், பொடா சட்டத்தின்கீழ் அநியாயமாகக் கைது செய்யப்பட்டு - 19 மாத காலம் சிறைவாழ்வை ஏற்று உச்சநீதிமன்றத்தில் கருத்துரிமைக்காக வாதாடி வெற்றி பெற்ற தியாக வேங்கை வைகோ அவர்களுக்கும்,-மாறாத நெஞ்சுரத்துடன் அடக்குமுறையை எதிர்க்கொண்ட தியாகவேங்கைகள் எண்மருக்கும் இம்மாநாடு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

முன்மொழிதல்: **கோமளா**

வழிமொழிதல்: **உமா கோதண்டராமன்**

தீர்மானம் எண் 2

அறிஞர் அண்ணா அவர்களின் கனவுத் திட்டமான சேதுக்கால்வாய்த் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றும் என்று அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் , கழகத்தின் மறுமலர்ச்சிப் பேரணியில் அறிவிக்கச் செய்ததோடு, டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இத்திட்டத்தை நிறைவேற்றும் என்று குறைந்தபட்ச செயல்திட்டத்தில் அறிவிக்கச் செய்தமைக்காகவும்;

மத நல்லிணக்கத்தை வலியுறுத்தியும், நதிநீர் இணைப்புக்காகவும், தம்மைத்தாமே வருத்திக்கொண்டு, திருநெல்வேலியில் இருந்து சென்னை வரை - 19 மாவட்டங்களின் வழியாக 42 நாள்கள் 1200 கி.மீ. தொலைவு கொட்டும் மழையிலும், கொளுத்திய வெயிலிலும் 3000 தொண்டர்களுடன் மறுமலர்ச்சிப் பயணம் மேற்கொண்டு, இலட்சக்கணக்கான மக்களைச் சந்தித்து விழிப்பு உணர்வை ஏற்படுத்தியமைக்காகவும்;

அன்னைத் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்திடப் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து குரல் கொடுத்தமைக்காவும்; சுனாமி மறுவாழ்வு நிதியாகத் தமிழக அரசிடம் முதன்முதலில் ரூபாய் 10 இலட்சம் கொடுத்து பாதிக்கப்பட்டவர்கள் துயர் துடைக்க நமது உள்ளுணர்வை வெளிப்படுத்தியமைக்காகவும்; பிழைப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கு ஏஜெண்டுகளால் ஏமாற்றப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட தமிழர்கள், தாய்நாடு திரும்பிவர மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து அவர்கள் பாதுகாப்பாகத் திரும்பி வரச் செய்தமைக்காகவும் கழகப் பொதுச் செயலாளர் புரட்சிப்புயல் தியாகவேங்கை வைகோ அவர்களை இம்மாநாடு வாழ்த்திப் பாராட்டுகிறது.

முன்மொழிதல் : **லதா செல்வராஜ்**

வழிமொழிதல்: **இந்துலேகா**

தீர்மானம் எண் 3

பெண்கள் இட ஒதுக்கீடு

சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். ஜனநாயகத்துக்குப் பொலிவு ஊட்டவும், மகளிர் உரிமை காக்கவும், இந்த இட ஒதுக்கீடு இன்றியமையாத ஒன்று ஆகும். கொள்கை அளவில், நாட்டின் அரசியல் கட்சிகள் அனைத்தும் இதனை ஏற்றுக் கொண்டு இருந்தாலும்கூட, இந்த இடஒதுக்கீட்டுக்கான மசோதா, அக்கறையுள்ள சக்திகள், சாமர்த்தியமாகப் போடுகின்ற முட்டுக்கட்டைகளால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது.

நாடாளுமன்ற மக்களவையில் தற்போது உள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து, அதன்மூலம் 33 சதவீதம் மகளிருக்கு இடஒதுக்கீடு செய்யலாம் எனும் கருத்து சர்ச்சைக்கு உரியதாக இருப்பதால், இதுகுறித்த வாதத்தில் காலத்தைக் கடத்திக் கொண்டு இருக்காமல், நாடாளுமன்றத்திலும், சட்டமன்றங்களிலும் தற்போது உள்ள இடங்களின்

அடிப்படையில் 33 சதவீதம் மகளிருக்கான இடஒதுக்கீடு வழங்குவதற்கான மசோதாவை மத்திய அரசு, நாடாளுமன்றத்தில் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்மொழிதல் **ஐ. மும்தாஜ்**

வழி மொழிதல் **ஆர். விசாலாட்சி**

தீர்மானம் எண் 4

நீதிமன்றங்களில் இட ஒதுக்கீடு

கீழமை நீதிமன்றங்களில் இருந்து உச்சநீதிமன்றம்வரை அதிக அளவில் மகளிர் நீதிபதிகளாக நியமனம் செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய - மாநில அரசுகளை இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்மொழிதல் **இந்திராணி**

வழிமொழிதல் **பத்மா கருப்பையா**

தீர்மானம் எண் 5

மியன்மார் நாட்டின் ஜனநாயகத்தைக் காப்பதற்காக இராணுவ ஆட்சியை எதிர்த்து வன்முறையற்ற அறப்போர் நடத்திவரும் ஆங் சான் சூ குயி, பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு, துன்புறுத்தப்படுகின்ற கொடுமையை இம்மாநாடு கண்டிக்கிறது. சிறையில் இவர் இருந்தபோதும், தேர்தலில் இவரது கட்சி மிகப்பெரிய வெற்றி பெற்றும்கூட, சமாதானத்துக்கான நோபல் பரிசை இவருக்கு வழங்கி உலகம் கௌரவித்தபோதிலும் இன்னமும் வீட்டுச் சிறையில் அவரை முடக்கி வைத்து இருப்பது கொடுமையான அநீதி ஆகும்.

அவரை வீட்டுச் சிறையில் இருந்து விடுவிக்கவும், அவரது ஜனநாயக உரிமைகளைக் காக்கவும், இந்திய அரசு பன்னாட்டு மன்றங்களில் குரல் கொடுப்பதோடு, இதுகுறித்து தனது கருத்தை மியன்மார் அரசிடம் வலியுறுத்த வேண்டும் என இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **அம்மூர் பிரேமா**

வழிமொழிதல் **பி. கௌசல்யா**

தீர்மானம் எண் 6

தமிழக அரசின் சமூகநலத் திட்டங்கள் அடித்தட்டு மக்களுக்கு முறையாகச் சென்று அடைவது இல்லை. இதில் அரசு நிர்வாகம் மெத்தனமாகச் செயல்படுகிறது. அத்துடன் லஞ்சம், முறைகேடுகள் அதிகரித்து உள்ளன. மாநில மகளிர் உரிமை ஆணையம், மகளிர் மேம்பாட்டுக்கு ஒதுக்கி உள்ள தொகையை, விழிப்பு உணர்வு இயக்கங்களுக்கு முறையாகச் செலவு செய்வதில் மாவட்ட சமூக நலத்துறை அக்கறை செலுத்துவது இல்லை. மகளிர் சுய உதவிக் குழுக்களை ஆளும் கட்சியினரின் அரசியல் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக செயல்படும் அமைப்பாக மாற்றி வரும் வேலைகளை அரசு அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

இத்தகையப் போக்குக்கு கண்டனம் தெரிவிப்பதோடு, எவ்விதப் பாகுபாடும் இன்றி தமிழக அரசின் சமூகநலத்திட்டங்களின் பயன்கள் அனைத்து மகளிருக்கும் சென்று அடையும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் எண் 7

காவல் நிலையங்களில் பெண்களுக்கு எதிராக நடைபெறும் உரிமை மீறல்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். மாவட்ட மகளிர் காவல் நிலையங்களில் இடைத்தரகர்களின் நடவடிக்கைகள் பெண்களுக்கு எதிராகவே உள்ளது. இடைத்தரகர்கள், மகளிர் காவல் நிலைய அதிகாரிகளின் இணைந்த செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உரிய நிவாரணம் கிடைக்காமல் மேலும் பாதிப்பு ஏற்படுகிறது. மகளிர் காவல் நிலையங்களில் அப்பாவிப் பெண்களை கவுன்சிலிங் என்ற பெயரில் அநாகரிகமாகவும், மனம் புண்படும்படியும் காவல்துறை அதிகாரிகள் நடந்து கொள்கின்றனர்.

எனவே, பாதிக்கப்பட்ட பெண்களைக் கண்ணியமாக நடத்துவதுடன், அவர்களுக்கு நியாயம் கிடைத்திடும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **மல்லிகா தயாளன்**

வழிமொழிதல் **சரசுவதி**

தீர்மானம் எண் 8

பெண் தொழிலாளர்கள்

அமைப்புசாரா பெண் தொழிலாளர்கள் தீப்பெட்டி, பட்டாசு, பீடி, பின்னல் ஆடை, கட்டுமானத் தொழில் செய்வோர், தனியார் மருத்துவமனைகளில் பணியாற்றும் செவிலியர்கள் போன்றோர் இத்தொழில்கள் மூலம் மிகமிகக் குறைந்த வருவாயையே ஈட்டுகிறார்கள். சட்டப்படி வேலைநேரம் 8 மணி என்றாலும், 12 மணி நேரம் வேலை செய்யுமாறு கட்டாயப்படுத்தப்படுகிறார்கள். இவர்களுக்கு வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் ஈட்டுறுதி காப்பு போன்ற சலுகைகள் கிடையாது. எந்தவிதமான பணிப்பாதுகாப்பும் இல்லை.

குழந்தைத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்திக் கொள்வதே சட்டப்படி குற்றம் ஆகும். ஆனால் வறுமைக் காரணமாக, பள்ளிக்குச் செல்லும் வயதில் இருக்கும் பெண் குழந்தைத் தொழிலாளர்கள் வீடு மற்றும் தொழிலகங்களில் பணியாற்றுகின்றார்கள். அப்பெண் குழந்தைத் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே வழங்கப்படுகிறது. அது மட்டும் அன்றி, அவர்களைக் கொடுமைப்படுத்தும் செய்திகள் நாளும் வந்தவண்ணமாக உள்ளன.

எனவே, இத்தகைய அமைப்புசாரா பெண் தொழிலாளர்களுக்குப் பணி பாதுகாப்பு முதலிய சலுகைகள் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் மேற்கொள்ள வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **டி. தேவகி**

வழிமொழிதல் வீரவநல்லூர் **வேலம்மாள்**

தீர்மானம் எண் 9

நம் நாட்டில் உள்ள செய்தித்தாள்களும், தொலைக்காட்சிகள், திரைப்படங்களும் பாலுணர்வைத் தூண்டி இலாபம் ஈட்டக்கூடிய வகைகளில் பரபரப்பான செய்திகளை வெளியிடுகின்றனவே தவிர, சமுதாய முன்னேற்றத்துக்கான செய்திகளை வெளியிடுவதில் கவனம் செலுத்துவது இல்லை. எந்தவகையான செய்தி ஊடகங்களிலும், பெண்களைப் பற்றிய விளம்பரங்கள், உரையாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் எனப் பாலியல் வக்கிரங்களை வழியவிட்டு காசு பணம் பண்ணுவதிலேயே குறிக்கோளாக இருக்கிறார்கள். சில பெண் கவிஞர்கள் கூட தாங்கள் படைக்கும் கவிதைகளில் பெண்மையையும், பெண்ணியத்தையும் கொச்சைப்படுத்தி வருகின்றனர்.

வேளாண்மைத் துறையிலும், அறிவியல் துறையிலும் ஜப்பான் நாட்டில் வியத்தகு முன்னேற்றம் அடைந்து இருப்பதற்கும், காலந்தவறாமை, கடின உழைப்பு ஆகிய நல்ல இயல்புகள் அனைவரிடமும் நிரம்பி இருப்பதற்கும் அந்நாட்டின் ஊடகங்களே பெரிதும் காரணமாக இருக்கிறது என்பதை நோக்கும்போது, நமது ஊடகங்களின் போக்கு கண்டு இம்மாநாடு கவலைப்படுகிறது. பெண்களைக் கவர்ச்சிப் பதுமைகளாக மட்டுமே சித்தரிக்கிற இழிவினைக் கண்டிக்கிறது.

சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும், அறிவியல், கலை, பண்பாடு, நாகரிகம் என அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் காண்பதற்குப் பொறுப்பு உணர்ச்சியோடும், கவலையுடனும் நம் நாட்டு ஊடகங்கள் பணியாற்றிட வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **ஆர். சின்னம்மாள்**

வழிமொழிதல் **ஜெயந்தி**

தீர்மானம் எண் 10

தேசிய மகளிர் ஆணையம் மற்றும் மாநில அரசின் கீழ் உள்ள மகளிர் ஆணையம் ஆற்றுகின்ற பணிகள் இன்னும் கிராமப்புறங்களைச் சென்று அடையவில்லை. படித்த மேல்தட்டு மற்றும் நடுத்தரக் குடும்பப் பெண்களிடையே மட்டும்தான் அவ்வமைப்புகளின் செயல்பாடுகள் தெரிகின்றன. பொருளாதாரத்தில் நலிந்த மற்றும் கல்வி அறிவு இல்லாத பெண்களைச் சென்று அடையும் வகையில் இவ்வமைப்புகளின் பணிகள், செயல்பாடுகள் அமைந்திட வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்மொழிதல் **புஷ்பலதா கிருஷ்ணன்**

வழிமொழிதல் **சரோஜா**

தீர்மானம் எண் 11

பெண் குழந்தைகள் கொலை

தமிழ்நாட்டில் பெண்களின் பிறப்பு விகிதம் 1000 க்கு 958 என்ற விகிதத்தில் அமைந்து உள்ளது. தமிழகத்தின் சில மாவட்டங்களில் பெண் குழந்தைகள் கொல்லப்படுகின்ற செய்தி உலகின் கவனத்தை ஈர்த்து உள்ளது. அது மட்டும் அன்றி, கருவில் இருக்கும் குழந்தைகள் கூட ஸ்கேன் செய்யப்பட்டு பெண் குழந்தைகளாக இருந்தால் கருக்கலைப்பு செய்கிற கொடுமை பெருமளவில் நடை பெறுகிறது. இக்கொடுமையைத் தடுத்து நிறுத்திட, இக்குற்றங்களைப்

புரிவோர் மீது தமிழக அரசு மிகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்மொழிதல் **கௌசல்யா ரவி**

வழிமொழிதல் **கலைவாணி மாரிமுத்து**

தீர்மானம் எண் 12

பெண்கள் மீதான வன்கொடுமை

பெண்கள் மீது நடைபெறும் பாலியல் வன்முறைகள் இப்போது அறிவியல் கருவிகளின் துணையோடு நடைபெற்று வருவது பெருங்கவலை அளிக்கிற செய்தியாக இருக்கிறது. இத்தகைய வன்முறைகள் அண்மைக்காலமாக மிகவும் அதிகரித்து வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள், தமது எதிர்கால வாழ்வைக் கருதி தங்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் குறித்து வெளியில் சொல்வது இல்லை. வெளியில் தெரிகின்ற பாலியல் வன்முறைச் செய்திகள் மட்டுமே பயங்கரத்தை ஏற்படுத்துமானால் - மறைக்கப்பட்டுவிட்ட செய்திகள் எத்தகைய வேதனையை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பாலியல் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களின் வழக்குகள் 20 சதவீதம் மட்டுமே பதிவு செய்யப்படுகிறது. அதிலும் குறிப்பாகத் தாழ்த்தப்பட்டப் பெண்களின் வழக்குகள் 5 சதவீதம் மட்டுமே காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், கடந்த 15 ஆண்டுகளாக எண்ணற்றப் பாலியல் வழக்குகள் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்றன எனும் செய்திகளை, **'உலக மன்னிப்பு மாமன்றம்** (Amnesty International) ஓர் அறிக்கையில் எடுத்து உரைப்பதை இம்மாநாடு மிகுந்த கவலையோடு சுட்டிக்காட்டுகிறது.

பெண்களின் மீதான வன்கொடுமைத் தாக்குதல்களைத் தடுப்பதற்காக 1984, 1989 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் உரிய பாதுகாப்பை அளிக்கவில்லை. எனவே, தமிழக அரசு இதுகுறித்தப் பிரச்சாரத்தையும், கண்காணிப்பையும் பலப்படுத்துவதுடன், பாலியல் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அரசு தக்க பாதுகாப்பு வழங்குவதோடு, அவர்களுக்கு ஒரு நிரந்தரப் பரிகாரம் அளிக்க வேண்டும் எனவும் இம்மாநாடு வலியுறுத்துகிறது.

முன்மொழிதல் **சரஸ்வதி பாக்யன்**

வழிமொழிதல் **மணியம்மாள்**

தீர்மானம் எண். 13

பெண்களுக்கு பத்திரப் பதிவுக் கட்டணச் சலுகை

பெண்கள் சொத்துகளைப் பத்திரப் பதிவு செய்யப் புதுவை மாநில அரசு 50 சதவீதம் பத்திரப் பதிவுக் கட்டணச் சலுகை வழங்கி உள்ளது. புதுவை மாநில அரசின் இந்த நடவடிக்கையை இம்மாநாடு வரவேற்கிறது. மகளிர்க்கு மாண்பு சேர்க்கும் இத்திட்டத்தினை இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **லட்சுமி ஜீவா**

வழிமொழிதல் **கே. பாக்யலட்சுமி**

தீர்மானம் எண் 14

மண வாழ்க்கை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்ததைவிட தற்போது பெண்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்றாலும், மண உறவுகளில் பெண்களுக்குப் பலத்த பின்னடைவு ஏற்பட்டு உள்ளது. வரதட்சணைக் கொடுமையினால் பெண்கள் கொலை செய்யப்படுவதும், தற்கொலை செய்து கொள்வதும் நாள்தோறும் நடைபெறும் சம்பவங்களாக இருக்கின்றன. சட்டத்தின் இரும்புக்கை கொண்டு இக்கொடுமையைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

பல்வேறு காரணங்களால் திருமணமான ஒருசில ஆண்டுகளிலேயே மணவிலக்குக் கோரிய வழக்குகள் 70 சதவீதம் நீதிமன்றங்களில் தேங்கிக் கிடக்கின்றன எனும் கவலையளிக்கின்ற செய்திகள் வெளியாகி உள்ளன. பெண் விடுதலையின் ஓர் அங்கமாக இத்தகைய வழக்குகளை நீதிமன்றங்கள் உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **பூங்கோதை**

வழிமொழிதல **மல்லிகா மனோகரன்**

தீர்மானம் எண் 15

டேட்டிங் கலாச்சாரம்

அண்மைக்காலமாகக் கல்லூரி மாணவர்கள் - மாணவிகளிடையே 'டேட்டிங் கலாச்சாரம்' என்ற தவறான உறவின்முறை உருவாகி உள்ளது. ஓர் ஆண், ஒரு பெண்ணோடு நட்பு பாராட்டிப் பழகுவது தவறு என்று சொல்லிவிட முடியாது. அந்நட்பு காதலாகி, கசிந்துருகி, அவர்கள் மணவாழ்க்கையினராக வாழ்க்கையில் வெற்றியின் முகட்டைக்கூட எட்டலாம். ஆனால், டேட்டிங் கலாச்சாரம் என்பது அடிப்படை வாழ்க்கைக்கே வேட்டு வைப்பதாய் உள்ளது. மண உறவுகளை மேற்கொள்ள விரும்புவோரிடையே இக்கலாச்சாரம் அய்ய உணர்வுகளை ஏற்படுத்தி வருவதாக உளவியல் மருத்துவர்கள் கூறி வருகின்றனர்.

இன்று ' டேட்டிங் கலாச்சாரத்தினால் கருக்கலைப்பு சம்பவங்கள் மிகவும் அதிகரித்து வருவதை ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. பெண்கள் மட்டுமே இதில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, மாணவியர் 'டேட்டிங் கலாச்சாரம்' என்ற கொடிய வலையில் சிக்காமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **கே. இராஜலட்சுமி**

வழிமொழிதல் **சுஜா லூதர்**

தீர்மானம் எண் 16

விளையாட்டுத் துறையில் பெண்கள்

கடந்த பத்து ஆண்டுகளில் உலக அளவிலான விளையாட்டுப் பந்தயங்களில் இந்தியப் பெண்களின் பங்கேற்பு குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்து இருக்கிறது. டென்னிஸ், டேபிள் டென்னிஸ், பேட்மிண்டன், ஹாக்கி, ஓட்டப்பந்தயம், உயரம் தாண்டுதல், நீளம் தாண்டுதல், நீச்சல், ஸ்குவாஷ் என அனைத்துப் பந்தயங்களிலும் இந்தியப் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து உள்ளது. எனினும், பெருமளவில் பதக்கங்களை வெல்லக்கூடிய வாய்ப்பு இன்னமும் கைகூடாமலே இருந்து வருகிறது.

உலக அளவிலான பந்தயங்களில் வெற்றி பெறுவதற்கான பயிற்சிகளை மேற்கொள்வதற்கு இலட்சக்கணக்கில் செலவாகிறது. அத்தகைய செலவினங்களை நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் சமாளிக்க முடியவில்லை. எனவே, தங்கள் பயிற்சியைப் பாதியில் நிறுத்திக் கொள்ள

வேண்டிய அவலம் ஏற்படுகிறது. அரசின் உதவித் தொகை கிடைப்பதும் அரிதாக இருக்கிறது.

எனவே, உலக அளவிலான போட்டிகளில் இந்தியப் பெண்கள் பெருமளவில் பங்கேற்று பதக்கங்களைக் குவிக்கும் வகையில், உலகத் தரம் வாய்ந்த பயிற்சியாளர்களை மத்திய - மாநில அரசுகள் தமது செலவிலேயே ஏற்பாடு செய்வதுடன், பயிற்சி பெறும் வீராங்கனைகளுக்கான உதவித் தொகையையும் பெருமளவில் உயர்த்தித் தர வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

முன்மொழிதல் **பீ.எஸ். ஜுபீன்ஜுகீல்**

வழிமொழிதல் **விஜயா கோயில்பிள்ளை**

ஆட்சி அதிகாரத்தில் பெண்கள்

"சமுதாயத்தில் 50 விழுக்காடு இருக்கின்ற பெண்கள் முன்னேறாவிட்டால், ஒட்டுமொத்த மனித சமுதாயம் ஒருபோதும் முன்னேற முடியாது" என்றார் தந்தை பெரியார். பெண்களின் உரிமைக்காகவே அவர் தம் வாழ்நாள் முழுமையும் பாடுபட்டார். அவரது வழியில் திராவிட இயக்கம் ஆற்றிய அரும்பணி காரணமாக, இந்தியாவின் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டு மகளிர் கல்வி அறிவிலும், சமுதாய வாழ்விலும் முன்னேறி வருகிறார்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கின்ற செய்தி. உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கப்பட்ட பிறகு, இந்தியா முழுமையும் பெண்கள் அரசியல் அதிகாரம் பெற்று வருகிறார்கள்.இருபதாம் நூற்றாண்டிலும், தற்போதும், உலக நாடுகளில் ஆட்சி அதிகாரத்தில் மகளிரின் பங்கு குறித்த சில செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

ஆசியா

ஆசியக் கண்டத்தில் பெண்கள் சமூக நிலையில் அடிமைகளைப் போல நடத்தப்பட்டு வந்தாலும், ஆட்சி அதிகாரத்தில் குறிப்பிடத்தக்க அளவில் சாதனை புரிந்து உள்ளனர் என்பது வியப்புக்கு உரிய செய்தி. 1959 ஆம் ஆண்டு இலங்கையின் பிரதமராக இருந்த சாலமன் வெஸ்ட் டயஸ் பண்டாரநாயகா, புத்த பிக்கு ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவருக்குப் பின்னர், ஸ்ரீ லங்கா சுதந்திரா கட்சியினர் (Sri Lanka Freedom Party-SLFP), பண்டாரநாயகாவின் துணைவியார் திருமதி **சிரிமாவோ** அவர்களைப் பிரதமராகத் தேர்ந்து எடுத்தனர்.

அவர்தான், உலகின் முதல் பெண் பிரதமர். சுமார் பத்து ஆண்டுகள் அவர் பிரதமராகப் பொறுப்பு வகித்தார். 1971 -75 காலகட்டத்தில் இலங்கையில் நீண்டகாலம் நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தி, எதிர்க்கட்சியினரை ஒடுக்கி வந்த சிரிமாவோ தேர்தலில் தோல்வி அடைந்து, ஜெயவர்த்தனே

ஆட்சிக்கு வந்தார். அவர் சிரிமாவோவின் வாக்கு உரிமையை ஆறு ஆண்டுகள் பறித்து விட்டார்.

ஏறத்தாழ 15 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர், சிரிமாவோவின் மகள் சந்திரிகா தலைநகர் கொழும்பு உள்ளிட்ட மேற்கு மாகாணத்தின் முதல்வராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். சந்திரிகாவின் கணவர் - திரைப்பட நடிகர் விஜய குமாரதுங்கே தனிக்கட்சி நடத்தி வந்தார். அவர், சிங்களத் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பின்னர், இலங்கையின் பிரதமராகவும், குடியரசுத் தலைவராகவும் **சந்திரிகா** இரண்டு முறை தேர்ந்து எடுக்கப்பட்டு, 12 ஆண்டுகள் பணி ஆற்றினார். சந்திரிகா குடியரசுத் தலைவராக இருந்தபோது, அவரது தாயாரைப் பிரதமராக நியமித்தார். ஒரே சமயத்தில், ஒரு நாட்டின் குடியரசுத் தலைவர் - பிரதமர் ஆகிய முதன்மையான இரண்டு பதவிகளில் தாயும், மகளும் பொறுப்பு வகித்தனர். இரண்டு முறை குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகித்த சந்திரிகா, அந்நாட்டுஅரசியல் சட்டத்தின்படி இனி தேர்தலில் போட்டியிட முடியாது.

இந்தியாவில், 1966 ஆம் ஆண்டு அம்மையார் **இந்திராகாந்தி** அவர்கள் பிரதமராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். 1967, 71, 80 ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில், காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றபோது இந்திரா மீண்டும் பிரதமர் ஆனார். உலக வரைபடத்தில் பங்களாதேஷ் என்ற புதிய நாட்டை உருவாக்கினார். 16 ஆண்டுக்காலம் பிரதமராக, சிறப்பாகப் பணி ஆற்றி இந்தியப் பெண் இனத்துக்குப் பெருமை சேர்த்தார். பஞ்சாப் பிரச்சினையின் காரணமாக, தம்முடைய பாதுகாவலர்களாக இருந்த இரண்டு சீக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பெண் முதல் அமைச்சர்கள்

இந்தியாவில் முதன்முதலாக உத்தரப் பிரதேச மாநிலத்தில், 1967 ஆம் ஆண்டு சுசேதா கிருபளானி, முதல் அமைச்சராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். நந்தினி சத்பதி (ஒரிஸ்ஸா-3 ஆண்டுகள்), சசிகலா ககோத்கர் (கோவா)(ஏழு ஆண்டுகள், அன்வாரா தைமூர் (அஸ்ஸாம்), ஜானகி இராமச்சந்திரன்,(23 நாள்கள்) ஜெயலலிதா (தமிழ்நாடு - 10 ஆண்டுகள்), ராஜீந்தர் கவுர் பட்டால் (பஞ்சாப்- 1ஆண்டு), உமா பாரதி (மத்தியப் பிரதேசம்- 1 ஆண்டு), ராப்ரிதேவி (பீகார் - 10 ஆண்டுகள்) ஆகியோர் முதல் அமைச்சர்களாகப் பணி ஆற்றி இருக்கின்றனர். தலைநகர் தில்லி மாநிலத்தின் முதல் அமைச்சராக திருமதி ஷீலா தீட்சித் கடந்த எட்டு ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

அண்டை நாட்டுப் பிரதமர்கள்

நமது அண்டை நாடான பாகிஸ்தானில், **பெனாசிர் புட்டோ** இரண்டு முறை பிரதமராகத் தேர்ந்து எடுக்கப்பட்டுப் பணி ஆற்றி இருக்கிறார். இவரது தந்தை ஜில்பிகர் அலி புட்டோவும், பாகிஸ்தான் பிரதமராகப் பணி ஆற்றியவர். ஜியாவுல் ஹக் இராணுவப் புரட்சியின் மூலம் அவரது ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு, புட்டோவைத் தூக்கில் இட்டுக் கொன்றார்.

2008 ஜனவரி 27 ஆம் நாள், தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டம் ஒன்றில், பெனாசிர் புட்டோ பேசிவிட்டுப் புறப்படுகையில், தற்கொலைப்படைத் தீவிரவாதிகளின் மனித வெடிகுண்டுத் தாக்குதலிலும், துப்பாக்கியால் சுடப்பட்டும் படுகொலை ஆனார். அதைத் தொடர்ந்து நடைபெற்ற பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல்களில், பெனாசிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி (Pakistan People's Party), 87 இடங்களைக் கைப்பற்றி, தனிப்பெரும் கட்சியாக முதல் இடத்தில் வெற்றி பெற்றது.

வங்கதேசத்தில், பேகம் **கலிதா ஜியா** இரண்டு முறை பிரதமராக பத்து ஆண்டுகள் பொறுப்பு வகித்து இருக்கிறார். அவரது கணவர் ஜியாவுர் ரஹ்மான், அந்த நாட்டின் இராணுவத் தலைவராக இருந்து, ஆட்சியைக் கைப்பற்றி குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகித்தார். வங்கதேச தேசியக் கட்சி (Bangladesh Nationalist Party) என்ற கட்சியைத் தொடங்கி தேர்தல் நடத்தி வெற்றி பெற்றார். பின்னர் நடைபெற்ற புரட்சியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

"வங்கதேசத்தின் தந்தை" ஷேக் முஜிபுர் ரஹ்மானும், அவரது குடும்பத்தினரும் இராணுவப் புரட்சியில் ஒட்டுமொத்தமாகச் சுட்டுக்கொல்லப்பட்டபோது, வெளிநாட்டில் இருந்த அவரது மகள் பேகம் **ஷேக் ஹசீனா வாஜேத்** மட்டும் உயிர்தப்பினார். நீண்ட காலத்துக்குப் பின்னர் வங்கதேசம் திரும்பினார். அவாமி லீக் (Awamy League) கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தேர்தலில் வெற்றி பெற்று ஐந்து ஆண்டுகள் பிரதமராக பொறுப்பு வகித்தார். தற்போது அவர் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிறார்.

பிலிப்பைன்சின் கொரசான் அகினோ

பிலிப்பைன்ஸ் நாட்டின் இராணுவ சர்வாதிகாரி மார்கோஸ் கொடுங்கோல் ஆட்சி நடத்தியபோது, அமெரிக்காவில் தஞ்சம் பெற்று இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அகினோ, நீண்டகாலத்துக்குப் பின்னர் நாட்டுக்குத் திரும்பி வந்தார். தலைநகர் மணிலா விமான நிலையத்தில் வந்து இறங்கிய அவர், அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். எனவே, சர்வாதிகாரி மார்கோசின்

கொடுங்கோல் ஆட்சியைத் தூக்கி எறிவதற்காக, அகினோவின் துணைவியார் **கொரசான் அகினோ** களத்தில் இறங்கினார். நீண்ட போராட்டத்துக்குப் பின்னர், 1986 ஆம் ஆண்டு, மார்கோசைத் தேர்தலில் வென்று, ஆட்சியை விட்டும், நாட்டை விட்டும் விரட்டி அடித்தார். ஆறு ஆண்டுகள் குடியரசுத் தலைவர் பொறுப்பு வகித்தார். (25 பிப்ரவரி 1986 முதல், 13 ஜூன் 1992 வரை)

சில ஆண்டுகளுக்கு முன்பு, பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபராக அந்நாட்டின் புகழ்பெற்ற திரைப்படக் கதாநாயகன் ஜோசப் எஸ்ட்ராடா தேர்தலின் மூலம் தேர்ந்து எடுக்கப்பட்டார். பதவிக்கு வந்த ஓராண்டுக்கு உள்ளேயே அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அவருக்கு எதிர்ப்பு வலுத்தது. பிலிப்பைன்ஸ் நாட்டின் கிறித்தவ மதகுருக்கள் அதிகாரவர்க்கத்தின் துணையோடு, துணைக் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகித்த **குளோரியா மெகபெகல் அரோயா** என்ற பெண்மணி, எஸ்ட்ராடாவைப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு அதிபராக முடிசூட்டிக் கொண்டார். கடந்த நான்கு ஆண்டுகளாகப் பொறுப்பு வகித்து வருகிறார். குளோரியாவின் தந்தையும் அந்த நாட்டின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகித்தவர்.

'இந்தோனேசியா நாட்டின் தந்தை' என்று அழைக்கப்படுகின்ற - அந்நாட்டின் அதிபராக இருந்த சுகர்ணோவின் மகள், **மேகவதி சுகர்ணோபுத்திரி** இந்தோனேசிய நாட்டின் அதிபராக சுமார் நான்கு ஆண்டுகள் பொறுப்பு வகித்தார். (13 ஜூலை 2001 முதல் 20 அக்டோபர் 2004 வரை) 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவர் தோல்வி அடைந்தார்.

நியூசிலாந்து நாட்டின் பிரதமராக ஹெலன் கிளார்க் என்ற பெண் தற்போது பதவி வகித்து வருகிறார்.

நமது அண்டை நாடான மியன்மார் (பர்மா) நாட்டில் கடந்த 25 ஆண்டுகளாக இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. **'பர்மாவின் தந்தை'** என்று அழைக்கப்படுகின்ற ஆங் சான் அவர்களின் மகள், ஆங் சான் சூ குயி அம்மையார், பத்து ஆண்டுகளுக்கு முன்பு அந்நாட்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 400 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றபோதிலும், இராணுவத் தளபதிகள் அவரிடம் ஆட்சியை ஒப்படைக்க மறுத்து விட்டனர். அப்போது முதல், கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக ஆங் சான் சூ குயி வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு இருக்கின்றார். உலக நாடுகள் அனைத்தும் அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன. அவருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டு இருக்கிறது. ஆயினும், அவர் எப்போது விடுதலை செய்யப்படுவார் என்பது தெரியவில்லை.

யூத இனத்தினர் உலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வருகிறார்கள். ஆயினும், 1950 ஆம் ஆண்டுக்கு முன்னர் அவர்களுக்குத் தனியாக ஒரு நாடு இல்லாத நிலைதான் இருந்தது. ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளில் பரவி இருந்த சுமார் 60 இலட்சம் யூதர்கள், அடால்ஃப் ஹிட்லரால் படுகொலை செய்யப்பட்டார்கள். எனவே, உலக வரைபடத்தில் யூதர்களுக்காக **'இஸ்ரேல்'** என்ற நாட்டினை உருவாக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானித்தனர்.அந்தப் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்த **கோல்டா மேயர்** என்ற பெண்மணி, பின்னாளில் அந்நாட்டின் பிரதமராகப் பொறுப்பு ஏற்றார். இஸ்ரேலைச் சுற்றிலும் இருக்கின்ற இஸ்லாமிய நாடுகளின் தாக்குதல்களைப் போர்க்களங்களில் முறியடித்து வெற்றிபெற்றுச் சாதனை படைத்தார்.

இஸ்லாமிய நாடுகளில் பெண்கள் அதிகாரப் பொறுப்புகளில் இல்லை. அண்மையில், சவூதி அரேபியா நாட்டின் உள்ளாட்சி அமைப்பு ஒன்றுக்கு நடைபெற்ற தேர்தலில் முதன்முறையாக ஒரு பெண் போட்டியிட்டு வெற்றி பெற்று இருக்கிறார். ஆப்கானிஸ்தான் நாட்டில் தற்போது நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒரே ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார். குவைத் நாடாளுமன்றத்திலும் ஒரு பெண் இடம் பெற்று இருக்கிறார்.

ஐரோப்பாவில் பெண்கள்

உலகின் ஐந்து பெரும் வல்லரசு நாடுகளுள் ஒன்றான இங்கிலாந்து நாட்டின் அரசி எலிசபெத், 1952 ஆம் ஆண்டு முதல் கடந்த 54 ஆண்டுகளாக அந்நாட்டின் அரசியாகப் பொறுப்பு வகித்து வருகிறார். உலக நிலப்பரப்பில் கால் பங்கு நாடுகள் (கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து உள்பட) இவரது தலைமையை ஏற்றுக்கொண்டு உள்ளன. இவரது முன்னோர், மகாராணி விக்டோரியா, சுமார் 60 ஆண்டுகள் இங்கிலாந்து நாட்டின் அரசியாகப் பதவி வகித்து இருக்கிறார்.

இங்கிலாந்து நாட்டின் பிரதமராக மூன்று முறை தேர்ந்து எடுக்கப்பட்டு, 12 ஆண்டுகள் ஆட்சி நடத்திய **மார்கரெட் தாட்சர், "இரும்புப் பெண்மணி"** என்று பெயர் பெற்றார். இங்கிலாந்து நாட்டில் இருந்து சுமார் 15,000 கிலோ மீட்டர்கள் தொலைவில், கடலில் இருக்கின்ற மிகச்சிறிய குட்டித் தீவான ஃபால்க்லாண்ட் தீவை, அர்ஜெண்டைனா கைப்பற்றிக்கொண்டபோது, பெரும் படையை அனுப்பி, அர்ஜெண்டைனா நாட்டைப் போரில் வென்று சாதனை படைத்தார் தாட்சர்.

அயர்லாந்து நாட்டின் பிரதமராக இருந்த **மேரி ராபின்சன்,** 3 டிசம்பர் 1990 முதல் 12 செப்டம்பர் 1997 வரை தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் மனித

உரிமைகள் ஆணையத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார். மேரி மெக் ஆலிஸ் என்ற பெண்மணிதான் தற்போது அயர்லாந்து நாட்டின் பிரதமராக இருக்கிறார். டார்ஜா ஹெலோனன் என்பவர்ஃபின்லாந்து நாட்டின் பிரதமராகப் பணி ஆற்றி வருகிறார். பால்டிக் குடியரசு நாடுகளுள் ஒன்றான லாட்வியாவில் வைராவிக் பிரபெர்கா என்ற பெண் பிரதமராகப் பணி ஆற்றி ஆற்றினார். (1999 to 2007)

அண்மையில் நடைபெற்ற ஃபிரான்ஸ் நாட்டின் குடியரசுத் தலைவர் தேர்தலில் செகோலீன் ராயல் (Segolene Royal) என்ற பெண் முதன்மைப் போட்டியாளராகக் களத்தில் நின்று, வெற்றி வாய்ப்பை இழந்தார்.

கடந்த ஐந்து மாதங்களுக்குள் ஜெர்மனி, லைபீரியா, சிலி ஆகிய நாடுகளில் பெண்கள் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அந்த நாடுகளின் தலைமை அதிகாரப் பொறுப்புக்கு வந்து உள்ளனர்.

சாதனை படைத்த ஆங்கெலா மெர்கெல்

ஜெர்மனி - ஐரோப்பா கண்டத்தின் வலிமை மிக்க நாடுகளுள் ஒன்று. இரண்டு உலகப் பெரும்போர்களுக்குக் காரணமான நாடு.அந்த நாட்டின் தலைவராக இருந்த அடாஃல்ப்ஹிட்லர் என்ற பெயரைக் கேட்டாலே அகிலம் நடுங்கியது. அவர்இருந்த இடத்தில்இன்று ஒரு பெண் பொறுப்பு ஏற்று இருக்கிறார் என்பது வியக்கத்தக்க சாதனை ஆகும். இச்சாதனையை நிகழ்த்திய பெண் **ஆங்கெலா மெர்கெல்** (Angela Merkel) (இந்தப் பெயரை நாம் 'ஏஞ்செலா' என்றுதான் சொல்லுவோம் - ஆனால் பிபிசி உள்ளிட்ட அயல்நாட்டுத் தொலைக்காட்சிகளில் 'ஆங்கெலா' என்றுதான் அழைக்கின்றார்கள்.)

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற ஜெர்மனி நாட்டின் நாடாளுமன்றமான புன்டெஸ்டாக் (Bundestag) கில் நடைபெற்ற வாக்குப்பதிவில், ஆங்கெலா மெர்கெல் 397 வாக்குகளைப் பெற்று அந்நாட்டின் சான்செலர் ஆகத் தேர்வு பெற்றார். மொத்தம் பதிவு ஆன வாக்குகள் 612 - செல்லுபடியானது 611 - 12 பேர் வாக்கு அளிக்கவில்லை - 202 பேர் ஆங்கெலாவை எதிர்த்து வாக்கு அளித்தனர். கடந்த ஏழு ஆண்டுகளாக சான்செலர் பொறுப்பில் இருந்த ஜெரார்டு ஸ்ரோடர் (Gerhard Schroder) ஆங்கெலாவுக்கு முதலில் வாழ்த்துகளைத் தெரிவித்தார். சான்செலர் ஆகத் தேர்வு பெற்றபின், ஆங்கெலா மெர்கெல் சார்லோட்டன்பர்க் கோட்டைக்குச் (Charlottenburg Castle) சென்றார். ஜெர்மன் நாட்டின் அதிபர் ஹோர்ஸ்ட் கோஹ்லெர் (Horst Kohler) ஆங்கெலாவுக்கு சான்செலராக நியமன ஆணையை வழங்கினார்.

இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னர் ஜெர்மன் நாட்டில் எட்டுப் பேர் சான்செலராகப் பொறுப்பு வகித்து இருக்கிறார்கள். அவர்களுள் ஆங்கெலா முதலாவது பெண் மட்டும் அல்ல - கிழக்கு ஜெர்மனியில் இருந்து இப்பொறுப்புக்கு முதன்முதலில் தேர்வு பெற்றவரும் இவரே. அதிபராகப் பொறுப்பு ஏற்கும்போது அவரது கட்சிக்குத் தனிப் பெரும்பான்மை இல்லை.ஆனால், கடந்த ஐந்து மாதங்களில் அவரது செயல்பாடு காரணமாக மக்களிடையே அவருக்கு ஆதரவு பெருகி இருக்கிறது.

அமெரிக்காவில்...

அமெரிக்க நாட்டின் வெளி உறவுத்துறை அமைச்சராக முதன் முறையாக கறுப்பர் இனத்தைச் சேர்ந்த **காண்டலீசா ரைஸ்** பொறுப்பு ஏற்று இருக்கிறார். இதன் மூலம் உலகின் சக்தி வாய்ந்த பெண்மணிகளுள் முதல் இடத்தைப் பெற்று இருக்கிறார். அமெரிக்காவின் அடுத்த குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடக்கூடிய அளவுக்குத் தகுதியும் - செல்வாக்கும் இவருக்கு இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தகைய சாதனையாளரான இவருக்கு வயது 46 தான். 2008 ஆம் ஆண்டு, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் பொறுப்பிற்கான தேர்தலில், குடியரசுக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடத் தேர்வு செய்யப்பட்டு உள்ள, ஜான் மெக்கெய்ன், காண்டலீசா ரைஸ் அவர்களை, துணைக் குடியரசுத் தவைராகத் தேர்வு செய்யப் போவதாக அறிவித்தார். ஆனால், தாம் வாழ்நாளில் ஒருபோதும், தேர்தலில் போட்டியிடப் போவது இல்லை என்று ரைஸ் அறிவித்து விட்டார்.

இந்தியாவின் சோனியா காந்தி,உலகின் சக்திவாய்ந்த பெண்களுள் மூன்றாம் இடத்தில் இருக்கிறார்.

ஆப்பிரிக்காவில்....

ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே முதன் முறையாக, வடமேற்கு ஆப்பிரிக்காவில் - தமிழ்நாட்டை ஒத்த நிலப்பரப்பு கொண்ட லைபீரியா என்ற நாட்டில் இரண்டு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில், எலன் ஜான்சன் சர்லீஃப் என்ற கருப்பர் இனப் பெண்மணி வெற்றி பெற்று, 2006 ஜனவரி 16 ஆம் நாள் பொறுப்பு ஏற்றுப் பணியாற்றி வருகிறார். அந்த நாட்டின் தலைநகர் மொன்ரோவியாவில் நடைபெற்ற அவரது பதவி ஏற்பு விழாவுக்கு அமெரிக்க நாட்டின் வெளி உறவுத்துறை அமைச்சர் காண்டலீசா ரைஸ், அதிபர் ஜார்ஜ் புஷ்ஷின் மனைவி பார்பரா புஷ் ஆகியோர் வந்து இருந்தனர்.

தென் அமெரிக்காவில்....

தென் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள சிலி நாட்டில் சோசலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த **மிச்செல் பேச்செலட்** (Michelle Bachelet)2007 ஆம் ஆண்டு

நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று அந்நாட்டின் குடியரசுத் தலைவராகப் பொறுப்பு வகித்து வருகிறார். இடதுசாரிக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட மிச்செல் 53 விழுக்காடு வாக்குகளைப் பெற்றார். சிலி நாடு தமிழ்நாட்டைப் போல் ஆறு மடங்கு கூடுதல் நிலப்பரப்பு கொண்ட நாடு. ஆனால், இது கடலை ஒட்டினாற்போல ஒரே நேர்கோடாக நீளவாக்கில் அமைந்து இருக்கிறது. இந்நாட்டின் கடற்கரையின்நீளம் சுமார் 6000 கிலோ மீட்டர்களுக்கும் கூடுதல் ஆகும்.

நாடாளுமன்றங்களில்....

பல ஐரோப்பிய நாடுகளின் நாடாளுமன்றங்களில் 35 விழுக்காட்டுக்கும் கூடுதலாக பெண்கள் இடம் பெற்று இருக்கின்றார்கள். சுவீடன் நாட்டு நாடாளுமன்றத்தில் 45 விழுக்காடு பெண்கள் இடம் பெற்று உள்ளனர். உலகிலேயே அதிக அளவாக, ஆப்பிரிக்கக் கண்டத்தில் ருவாண்டா நாட்டு நாடாளுமன்றத்தில் 49 விழுக்காடு பெண்கள் இடம்பெற்று உள்ளனர். புருண்டி (30), தான்சானியா (30) விழுக்காடு பெண்கள் இடம் பெற்று உள்ளனர். இருப்பினும், எந்த நாட்டிலும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு என்று தனியாக இட ஒதுக்கீடு எதுவும் இல்லை.

மக்கள்தொகையில் சரிபாதியாக இருக்கின்ற பெண்கள், நாடாளுமன்ற - சட்டமன்றங்களிலும் அதே அளவில் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை இயல்பானதே. இந்தியாவில் வீட்டு அதிகாரம் பெரும்பாலும் பெண்களிடம் இருக்கிறது. நாட்டு அதிகாரத்திலும் பெண்கள் சக்தி வலுப்பெற்று வருகிறது. இந்திய நாடாளுமன்றத்தில் தற்போது 8 விழுக்காடு பெண்கள் இடம் பெற்று உள்ளனர். 33 விழுக்காடு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற கோரிக்கை நிறைவேறும் கட்டம் நெருங்கி இருக்கிறது.

அருணகிரி

94443–93903

6 மார்ச் 2008